# தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

| துணர் | திருவள்ளுவர் யாண்டு ௲௯௱௮௯ | மலர் |
| --- | --- | --- |
| ௩௪ | விளம்பி, ஆனி<br>1958 சூன், சூலை. | ௩ |


## அற்ப உவமையில் அரிய பொருள்.


(வித்துவான் முத்து-கண்ணப்பன், பி.ஏ., எம். எல். சி.)


சுருங்கச் சொல்லி விளங்க வைத்தலில் தமிழ் மறை தந்த வள்ளுவப் பெருந்தகை தன்னிகரற்றவர். கடல் போன்று அகன்று பரந்து விரிந்த கருத்துக்களை யெல்லாம் கடுகு போன்ற சிறிய குறுகிய பாக்களில் அடக்கியுள்ளமை இலக்கிய உலகிலேயே ஒரு புதுமை! பாவுலகிலேயே ஒரு பெரும் புரட்சி!

"கடுகைத் துளைத்துஏழ் கடலைப் புகட்டிக்
குறுகத் தறித்த குறள்"—என்று புலவர் இடைக்காடனார் இக்கருத்தை மிக அழகாக வடித்துக் காட்டியிருக்கிறார். அவ்வை யடிகளார் இன்னும் ஒருபடி மேலே போய்

"அணுவைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக்
குறுகத் தறித்த குறள்"—என்று கூறுகிறார். மகளிர், செட்டில்-சிக்கனத்தில் பேர்போனவர்கள் அல்லவா?

சுருங்கச் சொல்லி விளங்கவைப்பதோடு அற்பமான உவமைகளை அழகாகக் கையாண்டு அரிய பொருள்களையும், பெரிய கருத்துக் களையும் விளக்குவதில் நம் பொய்யிற்புலவர் மிகவும் வல்லவர். இதற்கு எத்தனையோ குறட்பாக்கள் சான்று பகரும். சிலவற்றை ஈண்டுக் காண்போம்.

ஒரு மங்கை நல்லாள் நீண்டு, சுருண்டு, கறுத்துப் பெருத்துக் கனத்த கூந்தலையுடையாள். நிலைக்கண்ணாடியின் முன் நின்று கொண்டு நாள்தோறும், நெடுநேரம் தன் ஆருயிர் கூந்தலை அழகு படுத்துகின்றாள். மணம் கமழும் பலவித எண்ணெய் பூசி எழிலுறச் செய்கிறாள். பற்பல விதமாகவெல்லாம் கோடெடுத்துச் சீவிமுடித்துச் சீர்படுத்துகிறாள். கண்ணைப் பறிக்கும் வண்ணமலர்கள் சூட்டிக் கவினுறச் செய்கிறாள். சுருங்கக் கூறின் தன் தலைமயிரையே உயிராகக் கருதிப் பேணி வளர்க்கிறாள். அவளது சீர்மிகு தலையில் சிறப்புற ஒளிர்கிறது அவளது கார்வண்ணக் கூந்தல். அதனைக் குறிப்பிட்ட ஒரு சிலர் தவிர வேறெவரும் தொடுதல் கூடுமோ? தொட்டால் ஆபத்து. அவ்வளவு உயர்வுற ஒளிர்ந்த அக்கூந்தல் மயிரில் ஒன்று உதிர்ந்துவிடுகிறது. அது காற்றினால் உந்தப்பட்டுத் தும்புதூசோடு, குப்பையிலும், கூளத்திலும் புரண்டோடுகிறது.

வருவார் போவாரின் கால்களில் மிதிபட்டுத் தரையில் தாழ்ந்து கிடக்கிறது. அம்மயிரின் நிலைகளை உன்னிப்பாருங்கள். மாதரசியின் தலையிலே அன்று மாண்புற விளங்கியது; இன்று உதிர்ந்து கண்டவரின் காலடிக்கீழ் தாழ்ந்து கிடக்கிறது.

இந்த அற்ப உவமையை அழகுறக் கையாண்டு, தெய்வப்புலவர் ஒரு அரிய கருத்தினை விளக்கியுள்ளார்.

மக்கள் தம் தம் தகுதிக்கேற்ப ஒழுகல் வேண்டும். உரிய நெறிக்கண் நிற்றல் வேண்டும். அவ்வாறின்றி தம் நிலையை விட்டுத் தாழ்ந்தாராயின் மிகக் கேவலமாகக் கருதப்படுவர். பல்லோராலும் எள்ளி நகையாடப் படுவர்! அவர், 'இழிந்த மயிரனையர்' என்று கூறுவதில்தான் எவ்வளவு பொருளிருக்கிறது! பொருத்தமிருக் கிறது! இதோ அக்கருத்தைக் காட்டும் கவினுறு குறள்.

"தலையின் இழிந்த மயிரனையர் மாந்தர்
நிலையின் இழிந்தக் கடை. (மானம்-964)

உவமையும் அதனைக் கையாளும் முறையும் நயமும் எண்ணி யெண்ணி இன்புறற்பாலனவன்றோ?

2

செல்வச் சீமாட்டி யொருத்தி இரவு உணவை இனிது உண்டு இன்னிசை நுகர்ந்து இன்புற இருக்கிருள். மணி பத்தரைக்கு மேலாய்விட்டது. உறக்கம் மீதூர்கிறது. வெளியே சென்றுவிட்டுப் படுக்கை யறைக்குள் நுழைகிருள். அரிய வேலைப்பாடுகள் அமைந்த அழகான தந்தக்கட்டில்; அதன்மீது மிருதுவான கனத்த பட்டுப் பஞ்சணை மெத்தை; துல்லிய, தூயவெண்மை நிற விரிப்பு. தண்மையும், மென்மையும் மிக்க ஓவியம் ஒளிரும் தலையணைகள். அயர்ந்து அம் மாண்புறு மஞ்சத்தின்மேல் சாய்கிருள் நித்திராதேவி அரவணைக்கும் நேரம். ஏதோ அருவருப்பான நாற்றம் நாசியைத் துளைத்தது. எழுந்து கட்டிலின்மீது உட்கார்ந்து கொண்டாள். மின் விளக்கைத் தூண்டி என்னவெனப் பார்க்கிருள். படுக்கைக்குப் போகுமுன் வெளியே சென்றபோது எப்படியோ மலத்தைச் சற்று மிதித்து விட்டிருக்கவேண்டும். படுக்கையிலெல்லாம் பட்டுவிட்டது. உள்ளமும் உடலும் குன்றி, சுளித்துச் சூம்பிய முகத்தோடு செய்வ தொன்றும் தோன்ருது திகைத்தாள். வெளியே சென்று கைகால்களை சுத்தம் செய்துகொண்டு திரும்பி வந்தாள். வேறிடத்தில் படுத் துறங்க முயன்ருள். படுக்கை சரியில்லை. இடம் பிடிக்கவில்லை. இன்னும் நாற்றம எங்கிருந்தோ வருவது தோன்றியது. அவளது அக நாசியினின்றும் அந்நாற்றம் அகலவில்லைதானே? இரவெல்லாம் புரண்டு புரண்டு படுத்தாள். உறக்கமின்றிப் புழுவாய்த் துடித்தாள். தூக்கமின்மையால் உடல் கெட்டது, உள்ளம் கெட்டது. பொழுதும் 'பொல பொல'வென விடிந்தது. இவ்வாறு அன்றிரவு அவளுக்கு ஏகாதசியாய்க் கழிந்தது.

சென்ற இதழின் தொடர்ச்சி.

# அந்தாதி இலக்கியம்.

## திரு. அடிகளாசிரியர்.

சண்முகானந்த சுவாமி பாடிய திருத்தணிகைப் பதிற்றுப் பத்தந்தாதியுள் தன் மனத்தை நோக்கிக் கூறுவதாயுள்ள நாற்பத்திமூன்று, நாற்பத்திஐந்தாம் செய்யுள்கள் சிறந்த கருத்தை உணர்த்துவனவாய் அமைந்துள்ளன. "மனமே! நீ மேடையின் மேலேறி அடுக்கு மொழிகளாலும் மிடுக்கு மொழிகளாலும் எவ்வளவோ சீர்திருத்த மொழிகளை அள்ளி அள்ளி வீசுகின்றாய்; ஆனால், நீ கூறும் சீர்திருத்தக் கருத்துக்களை நீயே பின்பற்றவில்லையே! இதனால் உனக்குக் கிடைத்த பயனென்ன? நீ வீரத்தை விரும்புகின்றாய்; வீடும் மனையாளும் குழந்தையும் வேண்டுமென்று விரும்புகின்றாய்; நன்செயும் புன்செயும் விரும்புகின்றாய்; பெரிய பட்டம் பதவிகளையெல்லாம் விரும்புகின்றாய்; ஆனால், எல்லா வுயிர்க்கும் உதவி செய்ய வேண்டும் என்ற அன்புநெறியை மட்டும் சிறிதும் விரும்பவில்லையே!" என்று இடித்துக் கூறுகிறார்.

"வாயினாற் பலவுரைத்து நீ அந்நிலை வாய்ந்து நிற்குதவில்லை; ஆயினாற் பலனென்ன புன்னெஞ்சமே"

"வீரம் வேண்டினை மனைமக வேண்டினை விளைநிலம் முதலாய, பாரம் வேண்டினை பதவியை வேண்டினை பல்லுயிர்க்குதவுள்ள, ஈரம் வேண்டிலை"

(திருத்தணிகை பதிற் 43—45)

அந்தாதியிலே அகப்பொருட்டுறைப் பாட்டுகள் பல உண்டு. சைவ எல்லப்ப நாவலர் இயற்றியுள்ள திருவருணை அந்தாதியுள் அகப்பொருட்டுறை யமைந்த செய்யுளொன்றைப் பார்ப்போம்.

---

[66-ஆம் பக்கத் தொடர்ச்சி]

இந்த உவமையை மிக நுட்பமாகக் கையாண்டிருக்கிறார் தேவர். சான்றோரின் சபையில் மூடன் புகுந்தால் எப்படியிருக்கும் என்பதற்கு இது உவமை!

கழாஅக்கால் பள்ளியுள் வைத்தற்றால், சான்றோர்
குழாஅத்துள் பேதை புகல்

என்பதே அக்குறள்.

இவ்வாறு திட்பமாகவும், நுட்பமாகவும், தெளிவாகவும், எளிதாகவும் எவரேனும் உவமையைக் கையாள முடியுமோ?

(கழாஅக்கால்—மலம் மிதித்துக் கழுவாத கால்; பள்ளி—படுக்கை.)

(தொடரும்)

செல்வம் நிறைந்த ஒரு பெரிய குடும்பத்திலே தலைவன் தலைவி ஆகிய இருவரும் அன்பொத்த உளத்துடன் இல்லறம் நடத்தி வந்தனர். ஊடுதல் காமத்திற் கின்பம் ஆதலால் ஏதோ ஒரு காரணத்தை முன்னிட்டுத் தலைவி தலைவனுடன் பிணங்கிக்கொண் டிருந்தாள். இவர்கள் குடும்பத்திற் குரிய பாணன் ஒருவன் தலைவியின் பிணக்கை அறிந்து அதனை நீக்குதற்கு வாயிலாகச் சென்றான்.

அவன் தலைவியை நோக்கி "ஏ! கற்புடையவளே! உன் கணவனுடன் கொண்ட பிணக்கை விட்டுவிடுவாயாக" என்று சொல்லிக்கொண்டு தன் யாழை எடுத்து வாசிக்கத் தொடங்கி ஞன். தலைவிக்கு ஏதோ காரணத்தால் பாணன்மேலும் சின மிருந்தது. அதனால், அவள் ஒரு கல்லை எடுத்துப் பாணன் முன் விட்டெறிந்தாள். இவள் செயலைக் கண்டு வருந்திய பாணன் தலைவனிடம் சென்று கூறுகின்றான்: "அருணையம்பதியிலுள்ள புரவலனே! தலைவி வாழும் வீட்டின் பக்கம் சென்று, கற்புடை யாளே! என்று அழைத்து யாழை வாசித்தேன்; கற்புடையாள் என்பதற்குக் கற்பொழுக்கத்தையுடையவள் என்றும் பொருள் கூறலாம்; கல்லைப் பக்கத்திலே உடையவள் என்றும் பொருள் கூறலாம். ஆகையாலே, தலைவி இரண்டாவது பொருளைக் கருத் தில் வைத்துக்கொண்டு 'கற்புடையாள்' என்று யான் கூறியதற் குக் கைம்மேற் பலனாய்க் கல்லை என் எதிர் எறிந்தாள்" என்று கூறுகின்றான்.

"வெற்புடை யானின்ற வேலோனைத்
தந்தவன் வேழவுரிப்
பொற்புடை யானியல் சோணு
சலத்திற் புரவலனே!
இற்புடை யாழெடுத் தேன்மட
மான்கல் எதிர்எறிந்தாள்
கற்புடை யாள்என்ற சொல்லே
கொடுத்தது கைபலமே".

இத்தகைய அந்தாதி நூல்கள் பலவற்றைப் படித்துணர்ந்தால் சொன்முடிபும் அவற்றின் புணர்ச்சி அமைப்பும் நன்கு விளங் கும் என்று கருதிப் பழங்காலப் புலவர் அவற்றைப் படித்து வந்தனர்.

# முதற் கோப்பெருஞ்சிங்கனைப் பற்றிய சில கல்வெட்டுப் பாடல்கள்.

S. திருஞானசம்பந்தன், M. A.,
(அண்ணாமலைப் பல்கலைக்கழகம்)

சோழர் பேரரசு தென்னாட்டில் வளர்ச்சி பெற்று விளங்கிய காலத்தில் பல்லவ மரபினர் சிற்றரசர் நிலையை யெய்திச் சோழ மன்னர்களிடம் படைத்தலைவர்களாகவும் மந்திரிகளாகவும் பணி புரிந்து வந்தனர். அம்மரபில் வந்த தலைவர்களில் சிலர் மீண்டும் தமது முன்னோரின் சிறப்பினையும் புகழினையும் அடையக் காலம் கருதிக் கொண்டிருந்தனர். கி. பி. பதின்மூன்றும் நூற்றாண்டின் இடைப்பகுதியில் அவர்கள் முயற்சிகள் ஓரளவிற்கு வெற்றிபெற்றன. அவ்வாறு வெற்றியடைந்தவர்களில் பல்லவர்குலத் தலைவனாகிய முதற் கோப்பெருஞ்சிங்கனே முதல்வனாவன். அவன் மூன்றாங் குலோத்துங்க சோழன் (கி. பி. 1178—1218) காலத்தில் விளங்கிய ஒரு தலைவனாவான்; வாட்போரில் மிகச்சிறந்து விளங்கியமையால் வாணிலை கண்ட பெருமாள் என்னும் பட்டத்தையும் அவன் பெற்றிருந்தான். அப்பெருவீரனுடைய ஆற்றலைக்கண்டு மகிழ்வுற்ற குலோத்துங்கன் அவனுக்குத் தன் மகளை மணஞ்செய்வித்துப் பலவகையான சிறப்புக்களையும் செய்தான். இத்திருமணம் தில்லை மாநகரில் நிகழ்ந்ததாகத் தெரிகிறது. இதனையுணர்த்தும் பாடல்[1] வருமாறு :—

"சுந்தரத் தோரண நாட்டித் துகிற்கொடி சூட்டிமுத்துப்
பந்தர பாலிகை தீபம் பரப்புமின் பல்லவர்கோன்
செந்தளிர்க் கைகோத் தபயன் மகளுடன் தில்லையுலா
வந்தளிக் கும்பெரு மாள்வெற்பர் மாதை மணஞ்செய்யவே."

இந்த மண நிகழ்ச்சிக்குப் பிறகு கோப்பெருஞ்சிங்கன் மணவாளப் பெருமாள் என்றே வழங்கப் பெற்று வந்தனன்.

மூன்றாங் குலோத்துங்கன் காலத்திற்குப்பின் கோப்பெருஞ் சிங்கன் தனது குறிக்கோளை எளிதாக நிறைவேற்றி நடுநாட்டில் தனியாட்சி செலுத்தினான். அவனது ஆட்சி கி. பி. 1232 முதல் 1243 வரை நடுநாட்டில் நடைபெற்றது. சோழர் பேரரசனாகிய மூன்றும் இராசராசனை இத்தலைவன் கி. பி. 1231-ல் தெள்ளாற்றில் தோற்கடித்துத் தனது தலைநகராகிய சேந்தமங்கலத்தில் பட்டத் தரசிகள், படைத்தலைவர்கள் முதலானோருடன் சிறைப்படுத்தி வைத்திருந்தான். பின்னர் போசள வேந்தனாகிய இரண்டாம் நரசிம்மன் தலையீட்டினால் மூன்றும் இராசராசனும் அவனது பரிவாரத்தினரும் சிறைவீடு பெற்றனர்.

கீழ்வரும் பாடல்கள் முதற் கோப்பெருஞ்சிங்கனது வீரத்தையும் அவனது சிறப்பையும் உணர்த்துவனவாகும். பல்வேறு துறைகளில் அமைந்த அப்பாடல்கள் செய்யுள் நலஞ் செறிந்தும் வரலாற்

1. III Vol. XII, Introduction, p-10.

றுண்மைகள் பொதிந்தும் உள்ளமையால் அவற்றைக் கீழே தருகின்றேன்.*

1. சகல புவனச்சக்கரவர்த்தி ஸ்ரீ கோப்பெருஞ்சிங்கன் சோழ னைத் தெள்ளாற்றில்
2. வென்று சகல பரிச்சின்னமுங் கொண்டு சோழனைச் சிறை யிட்டு வைத்து சோணாடு கொண்ட அ
3. ழகிய சீயன்

வாகைத்திணை

(1) பொன்னி நாடனும் உரிமையும் அமைச்சரும் இருப்பதுன் சிறைக்கோட்டம்
பொருப் பிரண்டென வளர்ந்ததோள் வலியினாற் கொண்டது சோணாடு
கன்னி காவிரி பகிரதி நின்பரி யாடுதண் டுறைவாவி
காவன்மன்னவர் திறையுடன் உணங்குவ துன்பெருந் திருவாசல்
வென்னி டாதபோர்க் கன்னடர் வென்னிடப் பொருததுன் பெருஞ்சேனை
விளங்கு செம்பொனின் அம்பலக் கூத்துநீ விரும்பிய தேவாரம்
பின்னி காவல அவனிநா ராயண பேணுசெந் தமிழ்வாழப்
பிறந்த காடவ கோப்பெருஞ் சிங்கநின் பெருமையார் புகழ்வாரே.

இப்பாடல் கோப்பெருஞ் சிங்கனை முன்னிலைப்படுத்தி அவனது வெற்றித்திறத்தையும் அதற்குக் காரணமான தெய்வவழிபாட்டையும் சிறப்பித்துப் பாராட்டும் நிலையில் அமைந்துள்ளது.

வாகைத்திணை

(2) திறையிட் டிருமின்கள் தெவ்வேந்தர் செம்பொன்
திறையிட்ட பூம்புகார்ச் சோழன்—சிறைகிடந்த
கோட்டந் தனைநினைமின் கோப்பெருஞ்சிங் கன்கமல
நாட்டங் கடைசிவந்த நாள்.

இவ்வெண்பா அவனது 'அரும்பகை தாங்கும் ஆற்றலா'கிய வெற்றியைப் பகைவர்க்கு அறிவுறுத்தும் முறையில் அமைந்துள்ளது.

பின்வருவன கைக்கிளைத் திணையில் அமைந்தவை:

(3) மீளிவன் கொடிவிடை வேந்தர் மார்பினுந்
தோளிலுந் தீட்டிய தொண்டை மன்னவா
வாளில்வென் றிடுசிறை வளவன் தூங்கிய
நாளினும் பெரியதிந் நாளெனப் புலம்புமே.

* இப்பாடல்கள் Epigraphia Indica, Vol. XXIII-ல் ஆங்கிலத்தில் வெளிவந்தவையாகும்.

# இசைத் தமிழ்ப் பண்கள் விளக்கம்.

சங்கீதம். ப. சுந்தரேசன், குடந்தை

(பதிப்புரிமை கட்டுரை ஆசிரியருக்கே உரியது)

தென்னாட்டின் தொன்மையான தமிழ்மொழி, மிகப் பழங் காலத்தேயே மூன்று வகையாகப் பகுத்துணரப் பெற்றுள்ளதையும் அவற்றுள் நடுநிலையில் அறிந்துணரப்பெற்றதே இசைத்தமிழ் என்பதனையும் இக்காலத்தும் தமிழ்மொழி கற்றறிந்த யாவரும் ஒருங்கு உணர்ந்தே வருகின்றனர்.

மொழியுடன் சேர்த்துக் காணப்பட்ட அவ்வொரு பகுதி இசைத்தமிழ் எனப் பொதுவாகக் கூறப்படுவதும், சிறப்பு முறையில் தொல்காப்பியர் காலத்திற்கு முன்னரேயே நரம்பின் மறை எனக் கூறப்பட்டு இருப்பதும் பழந்தமிழ் வழக்கென்பதை இலக்கணம் பயின்ற இயற்றமிழாளர் யாவருமே அறிவர். அத்தகு சிறப்பும் தொன்மையுமுடைய இசைத்தமிழ், அக்காலம் முதல் இக்காலம் வரை இலக்கிய இலக்கணங்களுடன் நமது நாட்டில் வழக்கில் இருந்தே வருகின்றது. இக்கருத்து பொது முறையில் உண்மையேயாகும்.

இக்காலத்திய தென்னிந்திய இசை (கர்நாடக சங்கீதம்) எல்லாம் வடமொழிப் பெயராக இருப்பது குறித்து, பண்டைய

---

[70-ம் பக்கத் தொடர்ச்சி]

(4) அறைகடலின் இசையுடனே அண்டர் வேயி
ஞம்பலிசை செவிகவர அந்தி மாலை
நிறைமதியி னிலவென்னும் நெருப்புப் பட்டால்
நேரிழைநின் ருற்றுவளோ நிருப துங்கா
பிறைபொருத கனமகரக் கிம்புரிவன் கோட்டுப்
பெருங்களிற்றுச் சோழனையும் அமைச்சரையும் பிடித்துச்
சிறையிலிடக் களிறுவிடு மிண்டன் சீயன்
திரிபுவனத் திராசாக்கள் தம்பிரானே.

(5) ஒருநாளும் விடியாத நெடிய கங்குல்
ஊழியென நீண்டுவர வுலகிற் புன்கண்
மருண்மாலை யதுமுன்னே வந்த தென்றல்
மடந்தையிவள் ஆற்றுவளோ மல்லை வேந்தே
பொருமாலை முடியரசர் கன்னி மாதர்
போற்றிசெயும் புவனிமுழு துடையார் தாமுந்
திருமாதும் புணர்புயத்து மிண்டன் சீயன்
திரிபுவனத் திராசாக்கள் தம்பிரானே.

—இது சொக்கச்சீயன் ஆணை.

மேலே உள்ள மூன்று பாடல்களும் கோப்பெருஞ்சிங்கனைக் காமுற்ற தலைமகளது வருத்தத்தை அவள் தோழி அவன்முன் சென்று எடுத்துரைப்பனவாக அமைந்துள்ளன. இவை ஒருதலைக்காமமாகிய கைக்கிளைத் திணையில் அடங்குவனவாகும்.

இசைத்தமிழ் எவ்வாறு இன்றும் நம்நாட்டில் இருக்கின்றது எனக்கூறுவது பொருந்துவதன்று எனவும் சிலர் எண்ணக்கூடும். அவ்வாறு எண்ணுவோர் சிலரோ, பலரோ ஆயினும் அவர் யாவருக்கும் கீழே சில சிந்தனைக் கருத்துக்களை ஓரளவு விளக்கிக் காட்டுவோம். இவற்றைச் சுருக்கமான முறையில் தற்கால மிருந்தே விளக்குவாம்.

விளக்கம்–க.

இக்காலத்தில் தென்னிந்திய இசைக்காரர்களில் கண்டத் தாற் பாடுவோர் பலரும் பெரும்பாலும் பாடிக்கொண்டிருப் பதைத் தவிரத் தாங்கள் பாடும் பண்கள் (இராகங்கள்) பற்றிய இலக்கணவமைதிபற்றிச் சிறிதேனும் கவலை கொள்வதில்லை. இவர் களே முதல்தரமான இலக்கண இசைபாடுவோர் எனக் கருதப் படுகின்றனர். கருவிகள் ஊதுவோரும் இசைப்போரும் பெரும் பாலும் பாடகர்களைத் தழுவியே பாடல்களை வழக்குமுறையில் ஊதியோ, இசைத்தோ காட்டுகின்றனரேயன்றி மேற்கூறியாங்கு இலக்கணம் அறிய ஆவல்கொள்வதில்லை. இத்தகையினோர்க்கு நாட்டில் தொழில்முறை நன்கு நடைபெறவேண்டிய வாய்ப்புகள் ஏற்படுவது நிரம்ப ஆகுமிடத்து தங்கள் கல்வியை வளர்க்க மூற்படுவதுபற்றியும் கவலைகொள்ளாது, புதிய இசைமுறைகளைக் கைக்கொண்டு பெயர்பெற்று விடத்தக்க சூழ்நிலைகள் இக்காலம் நம்நாட்டில் நிரம்பவுண்டு.

விளக்கம்–உ.

இவ்விருபதாம் நூற்றாண்டில், அதாவது 1958 வரை, இசை யரங்குகள் நம் தமிழ்நாட்டில் நடைபெற்றதும் நடைபெறுவதும் கி. பி. பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்த இசைத்தொழிற்காரர்களின் முறையைச் சார்ந்ததாகும். பண் டைய தமிழ்வழி பாடப்பெற்ற தமிழ்ப்பதங்களையே பாடிவந்தவர் கள் பெரும்பாலோரும் ஆடல் (நாட்டியம்) தொழிலில் மிகவும் ஈடுபட்டமையினுலே அத்தொழில்முறை தமிழ்நாட்டில் வேறு வகையிலேயே தனித்து நடைபெற்று, அப்பரம்பரையினரில் இக்காலம் ஓரிரு இடங்களில் சில குடும்பத்தினர் மட்டும் (அதுவும் தங்கள் தொழிலை மறந்த குடும்பம்) இருந்து மற்ற வகைகள் மிகவுப் குறைந்துவிட்டன. **பண்டைய இசைத் தமிழைப் பாடும் முறைகள் பிற்காலத்தில் பதங்களில் மட்டும் கையாளப்பெற்று வந்தன.**

விளக்கம்–ங.

நம் நாட்டில் கி. பி. 19-ம் நூற்றாண்டில் வாழ்ந்த இசைத் தொழில்வல்லார் பலரில் ஒரு சிலர், தங்கள் காலத்திற்கு மூந்திய

(19-ம் நூற்றாண்டு) தியாகராசர், முத்துசாமி தீட்சிதர், சாமா சாத்திரியார் போன்ற பெரியோர்களின் பாடல்களையே நிரம்ப கைக்கொண்டு பாடியும் பரப்பியும் வந்தனர். இப்பாடல்கள் யாவும் சிறுபான்மை வடமொழியும் பெரும்பான்மை தெலுங்குமாகும். அக்காலத்தில் தமிழ்ப்பாடல்களை ஓரளவு பழைய முறையில் உயர்தர இசையில் பாடிவந்தவர்கள் தாசிமார்களும் நட்டுவனார்களுமேயாவர். முழுதும் தமிழாகவே பாடிவரும் முறை சிவனுறை கோயில்களில் விழாக்காலங்களில் ஓதுவார்கள் என்ற குழுவினர்களால் பாராயணமுறையில் இருந்துவந்தது. இவர்களிடத்தில் பழந்தமிழ் வழக்கு நன்கு பொதிந்து கிடந்திருந்தும் இசைப்பயிற்சி அத்துணைச் சிறப்புடையதாக இருந்தது எனக் கூற இடமில்லை. ஆயினும் பாடுகின்ற போக்குமுறை வழக்கு மிகவும் உயர்ந்தே இருந்திருக்கின்றது.

விளக்கம்–ச.

பண்டைய தமிழ்நாட்டு இசைமுறைகளை பண்முறையில் அதாவது, இராகம் வாசிக்குமுறையில் சீரிய முறையிலும் மரபு வழுவாமலும் நேர்த்தியாகவும் அச்சத்துடனும் அன்புடனும் ஆர்வத்துடனும் பாதுகாத்துத் தொழில்செய்து பிழைத்துப், தங்கள் குலத்தொழிலாகப் பழைய பாணர்கள் போன்றே வாழ்ந்தவர்கள் **எழில்** அல்லது **நெடுங்குழல்**, இதன் வேறொரு வகையான **குறுங்குழல்** என்றதும், பிற்காலப் பெயர்முறையில் **நாதசுரம்** என்ற கருவியைத் தொழில் முறையில் ஊதிப் பிழைத்து வந்த ஒரு வகையினர் என்பதே உறுதியாக உணர்ந்து காணக் கிடக்கின்றது. இவர்களே நாட்டைவிட்டு எந்தச் சூழ்நிலைகளிலும் அகலாதிருந்து பண்டைய இசைத்தமிழ்வகைகளை ஒலிமுறையில் வளர்த்து வந்தவர்களாவார்கள். நாளடைவில் இவர்களும் தொழிலாளிகளாயினர்.

விளக்கம்–ரு.

இவ்வாறு தென்னாட்டில், சிறப்பாகத் தமிழ்நாட்டில், இசைத் தொழில் முறைகள் ஒருபுறமிருக்க, நம் தஞ்சை மாவட்டத்தில் தஞ்சை அரண்மனையைச் சார்ந்து செல்வாக்குடன் திகழ்ந்த இசைப் புலவர்களிற் சிலர், விசயநகர ஆட்சிக்காலத்தையொட்டி எழுந்த இசையாராய்ச்சி முறை பலவற்றைத் தழுவியும், அதற்கேற்பத் தென்னிந்திய, அதாவது விந்திய மலைக்குத் தெற்கேயுள்ள நாடுகளின் இசை மரபுபற்றிக் கூறிய வடமொழி இசையிலக்கண நூல்களைத் தழுவியும், பழையனவற்றையும் புதியனவற்றையும் சேர்த்து, வழக்குமுறைகளையும் ஆராய்ந்து, வடமொழியில் தமிழ் நாட்டிலிருந்தே **இசையிலக்கணநூல்கள்** சிலவற்றை அவரவர்கள்

காலத்தில் எழுதிவைத்தனர். அத்தகைய நூல்களுள் ஒன்றாகிய சங்கிரக சூடாமணி எனும் நூல் கோவிந்தாச்சாரியார் என்பவரால் கி. பி. பதினெட்டாம் நூற்றாண்டில் எழுதப்பட்டது. இந்நூலில் கூறப்பெற்ற முறைகளே இவருக்குப் பிற்காலத்தில் தமிழ் நாட்டு இசைவல்லார் பலராலும் கைக்கொள்ளப்பெறும் நிலை வந்தெய்தியது.

விளக்கம்–சு.

மேற்கூறிய நூலுக்கு ஆதாரமாக இருந்தவை பதினேழாம் நூற்றாண்டில் நம் தஞ்சையிலே வாழ்ந்த வேங்கடமகியார் எழுதிய சதுர்தண்டிப் பிரகாசிகை எனும் வடமொழி நூலும் பிறவுமாகும். வேங்கடமகியாருக்கு முன், அவர் தந்தையார் கோவிந்த தீட்சிதர் அவர்களும் மற்ற ராமாமாத்தியர், சோமனாதர் போன்றவர்களும் எழுதிய தென்னாட்டு இசைமரபு கூறும் பல வடமொழி நூல்கள் நிரம்ப இருந்தன. விசயநகர ஆட்சியில் வாழ்ந்த வித்தியாரணியர் என்பாரே இற்றைய கர்நாடக சங்கீதத்திற்கு அடிகோலியவர் எனவும் ஆராய்ச்சியாளர்கள் கூறுவர். ஆக எல்லாம் சேர்ந்து பதின்மூன்றாம் நூற்றாண்டளவில் சாரங்க தேவரால் எழுதப்பெற்ற சங்கீத இரத்நாகரம் என்ற நூலை முதல் நூலாகக் கொள்ளும் வகையில் சென்றுவிடுகின்றன. ஆராய்ச்சியாளர்களிற் பெரும்பாலோர் சாரங்கதேவர் காலமிருந்து ஒரேயடியாகப் பரதர் காலத்திற்குப் பாய்ந்துவிடுவார்கள். அத்தகைய பரதரும், சாரங்கதேவரும் தென்னாட்டில், அவர்கள் காலத்திற்கு முற்பட்ட காலத்தில் எத்துணையோ நூற்றாண்டுகளுக்கு முன்னிருந்தே இசைக்கலை மிகவும் சீரும் சிறப்புமுறத் திகழ்ந்துவருகின்றது என்று கூறியிருப்பதே தொல்காப்பியர், அகத்தியர் காலத்திற்கு முந்திய இசைத்தமிழ்பற்றிய கருத்துக்களை வலியுறச்செய்வதாக முடிகின்றது.

விளக்கம்–எ.

ஆகவே, கி. பி. 13-ம் நூற்றாண்டிலிருந்து 18-ம் நூற்றாண்டு வரை தென்னிந்திய இசையிலக்கணங்களை வடமொழியில் எழுதிப் பாதுகாத்த ஆசிரியர்கள் பலர் என்பதையும் அவர்களுட் சிலர் தங்கள் தங்கள் நூல்களில் வடநாட்டு இசைமரபையும் சேர்த்துத் தென்னாட்டு இசைமுறை வழக்கினையும் ஆராய்ந்து எழுதிவைத்தனர் என்பதையும் உணரலாம். அரிபாலதேவர் என்ற பெரியவர்

ஒருவரே விந்தியமலைக்குத் தெற்கே உள்ள இசைக்கலை கர்நாடக சங்கீதமென்றும் வடக்கே வழங்கும் இசைக்கலை இந்துத்தானி சங்கீதம் எனவும் பிரிவுபடுத்திக்காட்டினர் என ஆராய்ச்சியாளர்கள் கூறுவர். தென்னாட்டு இசைமரபினை எத்துணை ஆசிரியர்கள் பல நூற்றாண்டுகளில் வேற்று மொழியில் எழுதிவைத்துள்ள போதிலும் வழக்குமுறைகள் மட்டும் தென்னாட்டு மக்களால் வழிவழியாகக் கைக்கொண்டு வரப்பெற்றன என்பதை என்றும் மறத்தற்கில்லை. ஒவ்வொரு காலத்தே இலக்கண எழுத்து முறைக்கும் இலக்கிய வழக்கு முறைக்கும் மாறுபாடு உண்டு என்பதையும் மேற்கூறிய ஆசிரியர்கள் கருத்துகளிலும் ஒருவருக்கொருவர் கூறுவது சிற்சில இடத்து மாறுபாடுறுகின்றன என்பதையும் நாம் உணரத்தான்வேண்டும்.

விளக்கம்—அ.

எந்நூற்றாண்டிலும் எவ்வாசிரியராயினும் தான் எழுதும் நூலில் அவர் காலத்து முன்னும், அவர் காலத்தும் வழக்கில் இருப்பதான பழைய காலத்தனவாகிய பண்களையே குறித்து வைத்தார் ஆதலினாலே பண்கள் மிகப் பழைய காலத்தன என்பதில் யாதொரு ஐயமுமில்லை. ஆனால் ஏதோ ஒரு பழைய பண்ணின் பெயர் ஒவ்வொரு காலத்தே ஒவ்வொருவரால் வேறு வேறு பெயர்களுடன் விளக்கம் பெற்றிருக்கக் கூடும். அடிப்படை முறையில், அதாவது ஒலி முறையில் எற்றைக்கும் மாறுபாடு இல்லையெனலாம். இசைத்தமிழிற்கு இலக்கியம்போன்ற ஒலியும் அதன் அமைப்பும் அதன் தொகுதியும் அன்றும் இன்றும் இனி என்றும் ஒன்றேதான். சீரிய இயற்கையான ஒலித்தொகுதியமைப்பில் அதனை உள்ளது உள்ளவாறே கண்டு இசைத்தால் அது மாறுபடுவதில்லை. குறுக்கே வேறொரு இடை ஒலியைச் சேர்த்து இசைக்குங்காலத்தேதான் மாறுபாடு வந்தெய்தும். ஒலிமட்டும் பழங்காலத்தும் தற்காலத்தும் ஒன்றேதான். சுருங்கக்கூறின் எந்நாட்டிற்கும் ஒன்றேதான். பண்பாடு மட்டுமே நாட்டிற்கு நாடு வேறுபடும். தமிழ் மொழிக்கும் தனித்த பண்பு ஒன்றுண்டு என்பதை மறக்க இயலாது.

விளக்கம்—கூ.

தென்னாட்டு இசை மரபாகிய, மிகப்பழையகாலத்து இசைத் தமிழிற்கு இன்றியமையாத உறுப்பு மூன்றாகும். அவை இசை **பண் நிறம்** எனப்படும். இம்மூன்றிலும் இடைநின்ற பண்ணைப்

பற்றிய இலக்கணத்தையே இவ்விளக்கம் விளக்கிச் செல்வதாகும். இசை என்ற சொல் தமிழ் மொழிக்கேயுரிய சொல்லமைதியாக, அதாவது ஈரெழுத்தொரு சொல்லாகத் திகழ்வதாகும். இச் சொல், இக்காலத்தும் பாமர மக்களிடத்தே பொருந்தும் என்ற முறையில் வழக்கிலிருப்பதை நன்கு உணரலாம். ஆனல் இச் சொல், மிகப்பழங்காலத்தில், சிறப்பாக, மக்கள் செவியினல் ஓர்ந்துணரும் ஒலியின் நீட்சியைக் குறிக்கும் சொல்லாக, ஆங்கும் ஒலிப்பொருத்தம் குறிக்க வழங்கி வந்துள்ளது. இதனைப் பழைய இசைத் தமிழ் முறையிற் கூறவேண்டுமாயின்,

"இசையெனப் படுவ தியம்புங் காலை
ஒத்துண ரொலியி னீட்சிய தாகும்"—எனக் கூறவேண்டும்.

இவ்விசையும், குழலிசை, யாழிசை என இருவகையாகப் பழைய தமிழ் மக்களால் அந்தந்த கருவிகள் மூலம் ஒலி எழுந்த தன்மை பற்றி ஓர்ந்து உணரப்பெறுவதாயிற்று.

குழலையும் யாழையும் முதன் முதற் கண்டு ஆக்கியவர்கள் தமிழ் நாட்டு முல்லைநில மக்களேயென, சங்கத் தமிழ் நூல்கள் நன்கு கூறுகின்றன. சிறப்பாக யாழ்க் கருவிகளை இசைத்துத் தொழில்புரிந்து வாழ்ந்த தமிழ்ப் பெருமக்கள் பாணர்கள் எனப் படுவதும் தமிழ் நூல் வழக்கேயாகும்.

பண்டைய தமிழ்நாட்டு, குழற்கருவிகள் மூலம் உணரப் பெற்ற இசைகள், முதலில் ஓரிசை, பின்னர் இரண்டிசை, அதன் பின் மூன்றிசை என்பதே இயற்கை முறையாயிற்று. இதுவரை பண் உணர்ச்சி ஏற்பட இயற்கை துணைபுரிய இயலாது. இந்த மூன்று இசைகளுடன் நான்காமிசையையும் ஐந்தாமிசையையும் கண்டு எல்லா இசைகளையும் விட்டுவிட்டிசைக்குங் காலத்தேதான் ஒருவகையான பண் உணர்ச்சி தோன்றலாயிற்று. இவ்வுணர்ச்சியும் குழற்கருவியில் துளைகளிட்டுப் பண்ணினமையாலும் யாழ்க்கருவி யால் மாற்கயிற்றைக்கட்டி, பண்ணிப்படுத்தமையாலும் தோன் றியதனை யறிந்து இசை என்ற சொல்போன்றே ஈரெழுத்து ஓர் சொல்லாக இயற்கை முறையில் பண் என்ற சொல்லால் கூறிக் குறித்து வெளிப்படுத்தப்படும் நீர்மையில் விளங்குவ தாயிற்று. இவை யாவும் நாட்டின் பழையகால சீரிய இயற்கை வழக்காகும்.

(தொடரும்)

# வருணன் வணக்கம்.

( மயிலை. சீனி. வேங்கடசாமி )

நிலத்தை அதன் இயற்கைக்கு ஏற்பக் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என ஐந்து பிரிவாகப் பிரித்தனர் பண்டைத் தமிழர். அவ்வாறு பிரித்த ஒவ்வொரு நிலப்பிரிவுக்கும் ஒவ்வொரு தெய்வத்தை அமைத்து வழிபட்டார்கள். மலைநாடாகிய குறிஞ்சிக்குத் தெய்வம் முருகன். காட்டு நிலமாகிய முல்லைக்குத் தெய்வம் மாயோன் என்னும் திருமால். வயல் நாடாகிய மருதத்துக்குத் தெய்வம் வேந்தன் என்னும் இந்திரன். கடற்கரைப் பகுதியாகிய நெய்தல் நிலத்திற்குத் தெய்வம் வருணன். வளம் அற்ற பாலை நிலத்துக்குத் தெய்வம் கொற்றவை ஆகிய காளி. மிகப்பழைய நூலாகிய தொல்காப்பியத்தில் இச்செய்தி கூறப்படுகிறது.

மாயோன் மேய காடுறை உலகமும்
சேயோன் மேய மைவரை உலகமும்
வேந்தன் மேய தீம்புனல் உலகமும்
வருணன் மேய பெருமணல் உலகமும்
முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் எனச்
சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே.

(தொல்-பொருள் அகத்திணையியல்-5)

இந்தக் கட்டுரையிலே கடல் தெய்வமாகிய வருணனைப் பற்றிச் சிறப்பாக ஆராய்வோம். வருணன் மேய பெருமணல் உலகம் என்பது வருணனுக்குரிய நெய்தல் நிலம் ஆகும். அலைகடலைத் தமது வாழ்க்கைக் களமாகக்கொண்டு கடற்கரையில் வாழ்கின்ற பட்டினவரும், கடல் கடந்து கப்பல் வாணிகம் செய்யும் வணிகப்பெரு மக்களும் பண்டைக்காலத்தில் வருணனைத் தமது வழிபடுகடவுளாகக் கொண்டிருந்தார்கள். எனவே, கடற்றெய்வமாகிய வருணன், கடற்கரை ஊர்களில் வாழ்ந்த மக்களுக்கு வாழ்வளிக்கும் தெய்வமாக விளங்கிற்று.

வருணனைப் பற்றிய செய்திகள் சங்க நூல்களில் அதிகமாகக் காணப்படவில்லை. ஏனைய முருகன், திருமால், இந்திரன், கொற்றவை என்னும் தெய்வங்களைப் பற்றிச் சங்க நூல்களில் பல செய்திகள் கிடைக்கின்றன. ஆனால், வருணனைப்பற்றிய செய்திகள் கிடைக்கவில்லை. இதனால், கடைச்சங்க காலத்திலேயே வருணன் வழிபாடு மறைந்துவிட்டது என்று கருதலாம். வருணன் வழிபாடு மறைந்ததற்குக் காரணமும் உண்டு. அஃதென்ன காரணம் என்றால்: மணிமேகலை என்னும் கடற்காவல் தெய்வத்தின் வழிபாடு புதிதாகப் புகுந்ததுதான். கி. மு. மூன்றும் நூற்றாண்டிலே, பௌத்த மதம் தமிழ் நாட்டில் இடம் பெற்றது. பௌத்த மதத்தின் சிறு தெய்வங்களில் மணிமேகலா தெய்வமும் ஒன்று. மணிமேகலை, கடற்

காவல் தெய்வம். கடலில் செல்பவர்களுக்கு இடுக்கண் நேராமல் பாதுகாக்கவேண்டியது மணிமேகலையின் கடமை. எனவே, பௌத்த சமய மணிமேகலை வந்தபிறகு பழைய வருணன் வணக்கம் பையப் பைய மறைந்துபோயிற்றுப் போலும். இக்காரணத்தினுற் போலும் கடைச் சங்க நூல்களிலே வருணனைப் பற்றிய செய்திகள் காணப் படவில்லை.

தொல்காப்பியத்திலே வருணன் பெயர் கூறப்பட்டது. பிறகு சிலப்பதிகாரத்திலே வருணனைப்பற்றிய குறிப்பு காணப்படுகிறது. அக்குறிப்பிலும் வருணன் என்னும் பெயர் கூறப்படாமல் கடற் றெய்வம் என்று மட்டும் கூறப்படுகிறது.

"கரியமலர் நெடுங்கட் காரிகைமுன் கடற்றெய்வங் காட்டிக்காட்டி
யரியசூள் பொய்த்தார் அறனிலரென் றேழையம்யாங்
கறிகோமைய'
(சிலம்பு: கானல்வரி - 5.)

"பூக்கமழ் கானலிற் பொய்ச்சூள் பொறுக்கென்று
மாக்கடற் றெய்வநின் மலரடி வணங்குதும்"
(சிலம்பு: கானல்வரி - 51.)

இவையன்றி, வருணனைப்பற்றிய வேறு குறிப்புகளைச் சங்கநூல் களில் நான் காணவில்லை. ஆகவே, இத்தெய்வத்தைப்பற்றிய முழு வரலாறு நமக்குக் கிடைக்கவில்லை. கி. பி. 2-ஆம் நூற்றுண்டிலேயே வருணன் வழிபாடு தமிழ்நாட்டில் மறக்கப்பட்டு மறைந்துபோயிற்று என்று கருதலாம். ஆனுல், வருணன் வழிபாடு மிகப் பழங்காலத் தில் தமிழ்நாட்டில் நிகழ்ந்துவந்தது என்பதில் சிறிதும் ஐயமில்லை.

தமிழரைப்போலவே ஆரியரும் வருணனை வணங்கினுர்கள். ஆனுல், தமிழரின் வருணன் வேறு; ஆரியரின் வருணன் வேறு. இவ்விரு வருணருக்கும் பெயர் ஒற்றுமை தவிர வேறு ஒற்றுமைகள் இல. இங்கு, இரண்டு வருணர்களைப்பற்றிய ஆராய்ச்சியில் புக வேண்டுவதில்லை. தமிழ் வருணனும் ஆரிய வருணனும் ஆதியில் வெவ்வேறு தெய்வங்களாக இருந்தனர். பின்னர், திராவிட தெய் வங்களுக்கும் ஆரிய தெய்வங்களுக்கும் பிற்காலத்தில் தொடர்பு கற்பிக்கப்பட்டதுபோல, இந்த வருணர்களுக்கும் தொடர்பு கற்பிக் கப்பட்டிருக்கலாம்.

பண்டைக் காலத்திலே தமிழரில் நாகர் என்னும் பெயருள்ள இனத்தினர் இருந்தனர் என்பது சங்க நூல்களினுல் தெரிகிறது. நாகர் கடற்கரைப் பகுதிகளிலே வாழ்ந்தனர் என்பதும் அவர்கள் கடல்மீது கலத்தில் சென்றனர் என்பதும் தெரிகின்றன, அவர்கள் இப்போது பட்டினவர் என்று கூறப்படுகிற நெய்தல் நில மக்களின் இனத்தவர்போலும். கடற்கரைப் பக்கங்களில் வசித்த அவர்கள் வருணனை வணங்கினுர்கள்போலும்.

வருணன் வழிபாடு, தமிழ்நாட்டில் மட்டும் நிகழ்ந்ததாகக் கருத வேண்டா. தமிழகத்தை அடுத்துள்ள இலங்கைத் தீவிலும் வருணன் வழிபாடு பண்டைக் காலத்தில் நிகழ்ந்தது. வருணன் வழிபாடுமட்டுமன்று, ஏனைய முருகன், திருமால், இந்திரன் வழிபாடு களும் இலங்கைத் தீவிலே நடைபெற்றன. இலங்கையில் நிகழ்ந்த இந்தக் கடவுளர் வழிபாட்டைப்பற்றிப் பின்னர் விரிவாக ஆராய் வோம். இப்போது, வருணன் வணக்கம் இலங்கையில் நிகழ்ந்ததைப் பற்றி மட்டும் கூறுவோம்.

இலங்கைத்தீவிலே வருணன் வழிபாடு தொன்றுதொட்டு நடை பெற்றுவந்தது. தமிழ்நாட்டில் நிகழ்ந்ததுபோலவே இலங்கையிலும் வருணன் வழிபாடு கடற்கரைப் பகுதிகளிலேதான் நிகழ்ந்தன. இலங்கைத் தீவின் தென்கோடியிலே, கடற்கரை ஓரத்திலே தேவுந்தர என்னும் நகரம் உண்டு. தேவுந்தர என்பது தேவிநுவர என்பதன் திரிபு. தேவிநுவர என்னும் சிங்கள மொழியின் பொருள் தேவநகரம் என்பது. தேவிநுவர என்னும் சொல்லைச் சிங்களவர் தேவுந்தர என்றும் தேநுவர என்றும் வழங்குவர். தமிழர் தனவர என்று வழங்குவர். ஆங்கிலேயர் தொண்ட்ரா என்று வழங்கினார்கள். இந்த நகரத்திலே உபுல்வன் என்னும் தெய்வத்திற்கு ஒருகோயில் இருந்தது. பேர்போன இந்த உபுல்வன் கோயிலைப் போர்ச்சுகீசியர் 18-ஆம் நூற்றாண்டில் இடித்துத் தகர்த்து அழித்துவிட்டார்கள். சிங்கள மொழியில் உபுல்வன் என்றால் வருணனைக் குறிக்கும்.

வருணனுக்கு உபுல்வன் என்னும் பெயர் எப்படி உண்டாயிற்று? உதகபால வருணன் என்னும் சொல்லின் சிதைவுதான் உபுல்வன் என்பது. உதகபாலன் என்றால் நீரை ஆட்சி செய்கிறவனென்பது பொருள். சிங்கள இலக்கண முறைப்படி உதகபால என்பது உதபால என்றாகிப் பின்னர் உதபால என்பது உபுல் என்றாயிற்று என்பர் சிங்கள மொழி அறிந்தவர். வன் என்பது வருணன் என்னும் சொல் லின் திரிபு என்பர். வருணன் என்பது வணன் என்றாகிப் பின்னர் வணன் என்பது வன் என்றாயிற்று. எனவே, உதகபால வருணன் என்னும் சொல்லின் திரிபு உபுல்வன் என்பது. உதகபாலன் என்பது நீர்க்கடவுளாகிய வருணனையே குறிக்கும். தேவுந்தர நக ரத்தில் கோயில்கொண்டிருந்த உபுல்வன் (உதகபால வருணன்) தெய்வம், கடலிலிருந்து வந்ததாகக் கூறப்படுகிறது. அப்படி என்றால் பொருள் என்ன? உபுல்வன், கடல் தெய்வம் என்பது தானே பொருள். உபுல்வன் தெய்வத்தை கிஹிராளி உபுல்வன் என்பர் சிங்களவர். கிஹிராளி என்றால் செஞ்சந்தன மரம் என்பது பொருள். செஞ் சந்தன மரத்தினால் செய்யப்பட்ட உபுல்வன் (வரு ணன்) உருவம் கடலில் மிதந்து வந்து தேவுந்தர நகரத்துக் கடற் கரையில் ஒதுங்கியதாகவும் அதனை எடுத்துவந்து கோயிலில் வைத்து வழிபாடு செய்ததாகவும் கூறுவர்.

இலங்கைத் தீவின் தென்மேற்குப் பகுதியிலும் கடற்கரையோரத்தில் வருணனுக்கு ஒரு கோயில் இருந்ததாகத் தெரிகிறது. அக்கோயிலில் எழுந்தருளியிருந்த தெய்வத்திற்குச் சிங்களவர் தேவொல் என்று பெயர் கூறுவர். தெவொல் என்பது உதகபால என்னும் சொல்லின் திரிபு என்பர். உதக, தக, உத என்னும் சிங்களச் சொற்களுக்குத் தண்ணீர் என்பது பொருள் நீர்க்கடவுள் என்னும் பொருள் உள்ள தகபால என்னும் சிங்களச் சொல் தகபல என்ருகி, பிறகு தகபல என்பது தயவல என்ருகி, பின்னர் தயவல என்பது தெவல என்ருகி, தெவல என்பது தெவொல் என்ருயிற்று என்று கூறுவர் சிங்கள அறிஞரான டாக்டர் S. பரணவிதன அவர்கள். எனவே தெவொல் என்னும் பெயர் உதகபாலனுகிய வருணனைக் குறிக்கிறது என்பதில் ஐயமில்லை.

தெவொல் தெய்வம் இலங்கைக்கு வந்த வரலாறு கூறப்படுகிறது. அது என்னவென்ருல்: தமிழ்நாட்டுக் கப்பல் வாணிகன் ஒருவன் கடலிற் சென்றுகொண்டிருந்தபோது, அவனுடைய மரக்கலம் உடைந்து, கடலில் தத்தளித்துக்கொண்டிருந்தான். அவனுடைய அல்லலைக் கண்ட கடற்காவல் தெய்வமாகிய மணிமேகலை (இது பௌத்த மதத்தைச் சேர்ந்த கடற்காவல் தெய்வம்), அவனுக்குக் கல்தெப்பம் ஒன்றைக் கொடுத்து அவனைக் கரையேற்றியது.) அந்த வணிகனுக்கு ஏற்பட்ட கோயில்தான் தெவொல் கோயில்.

இந்தக் கதையை அப்படியே ஏற்றுக்கொள்ள முடியவில்லை. ஆனல், இதில் சில உண்மைகள் மறைந்து கிடக்கின்றன. தமிழ்நாட்டு வாணிகனுக்கு மணிமேகலா தெய்வம் உதவிசெய்திருந்தால் அந்த நன்றிக்காக அவன் கட்டிய கோவிலில் மணிமேகலா தெய்வத்தை வைத்துப் பூசை செய்திருக்கவேண்டும். ஆனல், அதற்கு மாருக தெவொல் (உதகபாலன்) தெய்வத்தை வைத்துப் பூசை செய்திருக்கிருன். தமிழ்நாட்டு வாணிகன், தனக்கு உதவிசெய்த தெய்வம் உதகபாலன் ஆகிய வருணன் என்று நம்பியபடியால் அத்தெய்வத்திற்குக் கோயில் அமைத்து வழிபட்டான். தமிழருடைய பழய கடற் றெய்வம் வருணன் ஆகையால் அந்த முறைப்படி வருணனுக்குக் கோயில் கட்டி வணங்கினுன். பின்னர், பௌத்த மதம் பரவிய காலத்தில், பௌத்த மதத்தின் கடற்றெய்வமாகிய மணிமேகலை வணக்கம் ஏற்பட்ட காலத்தில், தமிழ வணிகனுக்குக் கடலில் உதவிசெய்த தெய்வம் மணிமேகலைதான் (வருணன் அல்லன்) என்பதை வற்புறுத்த மணிமேகலை வணிகனுக்கு உதவி செய்தது என்னும் கதை கற்பிக்கப்பட்டதுபோலும். எனவே, தெவொல் தெய்வம் என்பது தமிழரின் வருணன் என்பது உறுதிப்படுகிறது.

பழந தமிழ் நாட்டில் நிகழ்ந்த வருணன் வணக்கம் இலங்கைத் தீவில் எப்போது இடம்பெற்றது? இலங்கைத்தீவு பௌத்தமதத்

தின் கோட்டை போன்றது. எனவே, இலங்கைத்தீவில் பௌத்த மதம் பரவிய பிறகு, தமிழரின் வருணன் வணக்கம் இலங்கையில் புகுந்திருக்க முடியாது இலங்கையில் பௌத்தமதம் புகுவதற்கு முன்பே வருணன் வணக்கம் அங்குச் சென்றிருக்கவேண்டும். கி. மு. மூன்றும் நூற்றுண்டின் இடைப்பகுதியில் பௌத்தமதம் இலங்கைக்குச் சென்றது என்பது சரித்திர உண்மை. பௌத்தமதம் இலங்கைக்குச் செல்வதற்கு முன்பு, இலங்கையில் வாழ்ந்திருந்த மக்கள் யாதொரு தெய்வ வழிபாடும் இல்லாமல் மிருகங்களைப்போல வாழவில்லை, அவர்கள், தமிழர் வணங்கிவந்த முருகன், திருமால், இந்திரன், வருணன் முதலிய தெய்வங்களை வணங்கிவந்தனர். பௌத்தமதம் இலங்கையில் பரவி வேர் ஊன்றியபிறகும் பழைய தெய்வ வணக்கங்கள் மறைந்துவிடவில்லை. ஆனல், ஒரு மாறுபாடு ஏற்பட்டது. அது என்னவென்ருல், புத்தர் வணக்கம் (புத்தர் வழிபாடு) முதன்மை இடம் பெற்றது: முருகன், திருமால், வருணன் முதலிய தெய்வங்கள் பின் அணியில் நின்றன. அதாவது, பழைய தெய்வங்கள் சிறு தெய்வங்களாகக் கருதப்பட்டன. ஆனல், இத்தெய்வங்களின் வணக்கம் மறைந்துவிடவில்லை

இலங்கைத் தீவின் தென்கோடியில் தேவுந்தர நகரத்தில் இருந்த உபுல்வன் (வருணன்) கோயில் போர்ச்சுகீசிய மதவெறியர்களால் தகர்த்து அழிக்கப்பட்டபோதிலும், அத்தெய்வத்திற்கு ஆண்டுதோறும் விழா நடைபெறுகிறதாம். அவ்விழாவில் வருணனுடைய முத்துக்குடை ஊர்வலமாகக் கொண்டுபோகப்படுகிறதாம். வருணன், கடலுக்குத் தெய்வம் ஆகையால், கடலில் கிடைக்கும் சிறந்த பொருளாகிய முத்தினுல் குடையமைத்து வருணனை வழிபடுகிருர்கள் போலும்.

இலங்கையில் இருந்த வருணன் வழிபாடு, வட இந்தியாவிலிருந்து ஆரியர்கள் இலங்கையில் புகுத்திய வழிபாடு என்று சிங்கள அறிஞர்கள் கருதுகிருர்கள். இது தவருன கருத்து. இலங்கைக்கு அருகில் உள்ள தமிழ் நாட்டிலே, சங்க காலத்திலே வருணன் வழிபாடு நிகழ்ந்து வந்தது என்னும் உண்மையை அவர்கள் அறியார். அறிந்திருந்தால் தமிழ் நாட்டிலிருந்து வருணன் வழிபாடு இலங்கைக்குச் சென்றது என்னும் உண்மையை ஒப்புக்கொள்வார்கள். "வருணன் மேய பெருமணல் உலகம்" என்னும் தொல்காப்பிய சூத்திரத்தை ஓதியுணர்ந்து அவர்கள் உண்மையறிவார்களாக.

வருணன் வழிபாடு தமிழகத்தில் கி. பி. இரண்டாம் நூற்றுண்டிலேயே மறைந்துவிட்டது. ஆனல் அந்த வழிபாடு இலங்கையில் சமீபகாலம் வரையில் நிகழ்ந்து வந்தது. ஏன்? கோயில் அழிந்துவிட்டபோதிலும், இன்றும் வருணன் திருவிழா நடைபெறுகிறது!

வருணனைப் பற்றிய வேறு செய்திகளைப் பின்னர்க் கூறுவோம்.

---

# மக்கள் வாழ்வும் இலக்கியமும்.

(சாமி. சிதம்பரனுர்)

(குறிப்பு :- கரந்தைத் தமிழ்ச் சங்கத்தில் ஆற்றிய சொற்பொழிவின் சுருக்கம்.)

இலக்கியம் என்ருல் குறிக்கோளை உடையது. இலக்கு என்பது குறிக்கோள். இலக்கிலிருந்து இலக்கியம் என்னும் சொல் பிறந்தது. இலட்சியம்—அதாவது நோக்கம்—என்ற சொல்லிலிருந்து இலக்கியம் பிறந்ததாகக் கூறுவோரும் உண்டு.

மக்கள் நாகரிகமற்றவர்களாய் விலங்குகள்போல் வாழ்ந்த காலம் ஒன்று உண்டு. அக்காலத்தில் இலக்கியங்கள் இல்லை. நாகரிகம் பிறந்த பின்னரே இலக்கியம் பிறந்தது.

ஒரு நாட்டின்—ஒரு சமுதாயத்தின்—பண்பாட்டை அந்நாட்டின் இலக்கியங்களைக்கொண்டு முடிவு கட்டிவிடலாம் பழமையான பண்பாடுள்ள சமுதாயத்தில்தான், பழமையான இலக்கியங்களைக் காண முடியும்.

ஒரு நாட்டின் இலக்கியம், அந்நாட்டு மக்களின் வாழ்க்கையை ஒட்டியே வளர்ந்துவரும். மக்கள் வாழ்க்கையையும், இலக்கியத்தையும் வேறு பிரிக்கமுடியாது. மக்கள் வாழ்வோடு இணைந்து வளரும் இலக்கியந்தான் அழியாத இலக்கியமாக நிலைத்து நிற்கும்.

திருமணம், குடும்ப வாழ்வு, பிள்ளைப்பேறு, கடவுள் வழிபாடு, கதைகள், கவிதைகள், அரசியல் முதலியவைகள்பற்றி இலக்கியங்களில் கூறப்படுகின்றன. அவைகள் அவ்வக்கால மக்கள் வாழ்க்கை நிலையை ஒட்டியே எழுதப்பட்டிருக்கின்றன. இவைகளைப் பண்டைக் கால மக்கள் வாழ்க்கையை விளக்கும் வரலாறுகள் என்று கொள்ள வேண்டும்.

ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்குமுன் எழுதப்பட்ட கவிதைகள் இன்னும் நிலைத்திருக்கின்றன. காவியங்கள் இன்றும் படிக்கப்படுகின்றன. அவைகள் சிறந்த இலக்கியங்கள் என்று பாராட்டப்படுகின்றன. அவைகள் அக்கால மக்களின் பண்பாட்டை விளக்குவதால்தான் இன்றும் நிலைத்திருக்கின்றன; அக்கால மக்களின் வாழ்வை வரலாறுபோல் எடுத்துக்காட்டுவதால்தான் உயர்ந்த இலக்கியங்களாக உயிர் வாழ்கின்றன.

பழந்தமிழ் இலக்கியங்கள் பெரும்பாலும் மக்கள் வாழ்வோடு இணைந்து நிற்பவை. அவைகளை இயற்றிய புலவர்கள் மக்களோடு சேர்ந்து பழகியவர்கள்; அவர்களுடைய வாழ்க்கை நிலையை அறிந்தவர்கள். ஆகையால்தான் அவர்களால் அழியாத கவிதைகளையும், காவியங்களையும் ஆக்கமுடிந்தது. இந்த உண்மையை இக்காலப் புலவர்களும் உள்ளத்திலே கொள்ளவேண்டும்; கொண்டால்தான் சிறந்த—பயன்படத்தக்க—இலக்கியங்கள் பிறக்கும்.

**மண வாழ்வு.**

நாகரிகம் பிறப்பதற்கு அடிப்படையாயிருந்தது ஆண் பெண் கூட்டு வாழ்க்கைதான். ஒரு ஆணும், ஒரு பெண்ணும், தனித்துக்

குடும்பம் நடத்தத் தொடங்கியபிறகுதான் ஒழுங்குமுறையுள்ள சமுதாயம் பிறந்தது; அரசியல் பிறந்தது; கலைகள், காவியங்கள் போன்ற நாகரிகச் சின்னங்கள் எல்லாம் பிறந்தன; அவைகள் நன்றாக வளர்ந்து தழைத்தன.

நாகரிகமற்ற காலத்திலே மக்கள் மனம்போன போக்கில் திரிந்து கொண்டிருந்தனர். நாளடைவில்தான், தனித்தனிக் குடும்பமாக வாழத்தொடங்கினர். இக்காலத்தில் ஒருவனும் ஒருத்தியும் காதல் கொண்டு கணவன் மனைவியாகக் குடித்தனம் நடத்தினர். சாதி வேற்றுமையின்றி, பெற்றோர் சம்மதமின்றி, காதல்கொண்ட ஒரு ஆணும் பெண்ணும் கூடி வாழ்வதே குடும்ப வாழ்வாகக் கருதப் பட்டது. இந்த உண்மையை "யாயும் ஞாயும் யாராகியரோ" என்று தொடங்கும் குறுந்தொகைப் பாட்டால் அறியலாம்.

இந்த வாழ்விலே சில சிக்கல்கள் பிறந்தன. தாமே மணம் புரிந்துகொண்ட காதலர்களுக்குள் பிணக்கு பிரிவினை போன்ற குற்றங்கள் தோன்றத் தொடங்கின. இந்நிலை வளர்ந்தால் சமுதாயக் கட்டுக்கோப்புக் குலையும் என்று அறிஞர்கள் கண்டனர். ஆதலால் அவர்கள் திருமணத்திற்குச் சில சடங்குகளை ஏற்படுத்தினர். இதனைப் "பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்" என்று தொடங்கும் தொல்காப்பியப் பொருளதிகாரச் சூத்திரத்தாற் காணலாம்

முதலில் ஏற்பட்ட திருமணச் சடங்கிலே புரோகிதமோ, மந்திரமோ, தீவளர்ப்போ இல்லை. அவைகள் பெண்களால் நடத்தப் படும் சடங்குகளாகவே இருந்தன. இச்சடங்குகளைப் பற்றி அகநானூற்றில் உள்ள 86, 136 ஆகிய இரண்டு பாடல்களிலே காணலாம்.

அகநானூற்றுக் காலத்திலேயே வேதவிதிப்படி செய்யும் திருமணச் சடங்குகள் தமிழகத்திலே பிறந்துவிட்டன. ஆயினும் சிலப்பதிகாரகாலந் தொடங்கித்தான் நாகரிகம்பெற்ற பெரும்பாலான தமிழர்கள் வேத விதிப்படியே திருமணங்களைச் செய்துவந்தனர். திருமணத்தைத் தெய்வத்தின் செயலாகக் கருதிய காரணத்தால் தான் தெய்வீகத் தொடர்புள்ள சடங்குகளைத் தமிழர்கள் மேற் கொண்டனர். சிலப்பதிகாரத்திற்குப் பின் தோன்றிய எல்லா இலக்கியங்களிலும் திருமணத்தைப் பற்றிப் பேசும் இடங்களி லெல்லாம் வேத விதிப்படி நடந்த திருமண நிகழ்ச்சிகளே சொல்லப் படுகின்றன.

சடங்கற்ற திருமணங்கள்—காதல் திருமணங்கள்—நடந்ததை அகப்பொருள் இலக்கியங்களிலே காண்கின்றோம். முதலில் தமிழில் தோன்றிய இலக்கியங்கள் அகப்பொருட் பாடல்கள்தாம். இதன்பின் புரோகித—மந்திர மற்ற சடங்குத் திருமணங்களைப் பற்றியும் இலக் கியங்களில் காணுகின்றோம். இதன்பின் தெய்வீகச் சடங்குகளுடன் நடைபெற்ற திருமணங்களைப்பற்றியும் இலக்கியங்கள் கூறுகின்றன.

மக்கள் வாழ்வை ஒட்டியே இலக்கியங்கள் பிறந்தன என்பதற்கு இது ஒரு சான்ருகும்.

## குடும்ப வாழ்வு.

ஒரு காலத்தில் பெண்கள்தான் சமுதாயத்திலே ஆதிக்கம் பெற்றிருந்தனர். ஆண்கள் அவர்களுக்கு அடிமையாக வாழ்ந்தனர். பெண்கள் தாயாக இருந்ததனுல், ஆண்கள் அவர்கள் விருப்பப்படி நடக்கவேண்டியது இயற்கையாக இருந்தது. இப்படி இருந்தகாலம் நாகரிகம் உள்ள காலம் அன்று. பெண்கள் வைத்ததுதான் சட்டம். அவர்கள் அண்ணன், தம்பி, தந்தை, பிள்ளை என்ற முறையில்லாமல், தாங்கள் விரும்பிய ஆண்களைக் காதலராகக்கொண்ட காலம் அது. ஒரு பெண் தான் விரும்பிய பல ஆண்களுடன் கூடி வாழ்ந்த காலம் அது. அத்தகைய அநாகரிக காலத்தில் இலக்கியம் பிறக்கவில்லை.

நாளடைவில்தான் ஆண்கள் உரிமையுள்ளவர்கள் ஆனுர்கள். குடும்பம் நடத்துவதற்கு வேண்டிய செல்வத்தை ஈட்டும் திறமை ஆண்களுக்கு ஏற்பட்ட பின்புதான் அவர்கள் பெண்களிடமிருந்து விடுதலை பெற்றனர். இதன் பிறகுதான் நாகரிகம் வளர்ந்தது. இந்த நாகரிகத்தை விளக்கும் இலக்கியங்களும் தோன்றின.

ஆண்கள் விடுதலை பெற்றவுடன் பெண்களை அடக்கியாளத் தொடங்கினர். ஒரு பெண் ஒருவனைத்தான் காதலிக்கலாம் என்று முடிவு கட்டினர், ஆண்களுக்கு இந்தக் கண்டிப்பு இல்லை. ஒருவன் பல பெண்களை மணக்கலாம், மணந்த மனைவியரைத் தவிர வேசையர்களுடனும் குலாவலாம். ஆண்களின் இச்செயல் குற்றமாகக் கருதப்படவில்லை. இவைகளைப்பற்றி அகப்பொருள் இலக்கியங்களிலே காணலாம்.

ஆண்களின் இந்நடத்தைகளைப் பெண்கள் முழுமனத்துடன் ஒப்புக்கொள்ளவில்லை. ஒழுங்கீனமாக நடக்கும் ஆண்களுக்கும் அவர்களுடைய மனைவிமார்களுக்கும் அடிக்கடி சச்சரவுகள் ஏற்பட்டு வந்தன. இதுதான் பிணக்கு என்றும், ஊடல் என்றும் இலக்கியங்களிற் கூறப்படுகின்றது.

எக்காலத்திலும், செல்வவசதி படைத்தவர்களே ஒழுக்கந் தவறுவதுந் தங்கள் உரிமை என்று எண்ணுவார்கள். பண்டைக் காலத்திலும் காரிகையர்கள்-விலைமாதர்கள்-பரத்தையர்கள்-பொது மாதர்கள் என்பவர்களின் கூட்டுறவை நாடித்திரிந்தவர்கள் மருத நிலத் தலைவர்கள் என்றுதான் கூறப்படுகின்றனர். மருதநிலத் தலைவர்கள், மற்ற நிலத்தினரைக்காட்டினும் நாகரிகமும் செல்வமும் படைத்தவர்கள். அவர்கள் தான் ஒழுங்கற்ற நடத்தையை மிகுதியாகப் பின்பற்றினர் என்பதை மருதத்திணைப் பாடல்களாற் காணலாம்.

அறிஞர்கள், ஒருவனும் ஒருத்தியும் ஒன்றுபட்டு வாழ்வதுதான் சிறந்த வாழ்வு; உயர்ந்த வாழ்வு; உத்தமமான வாழ்வு என்று

கண்டனர். அவர்கள் பெண்களைப் போலவே, ஆண்களும் ஒருத்தியைப் பற்றி ஓரகத்தில் வாழவேண்டும் என்று எண்ணினர்.

இவ்வுண்மையைத் திருவள்ளுவர் வலியுறுத்தினர். 'வாழ்க்கைத் துணைநலம்' என்னும் அதிகாரத்தில் ஒருவனுக்கு ஒருத்தி என்ற கருத்தே காணப்படுகின்றது. 'பிறனில் விழையாமை' 'வரைவின் மகளிர்' என்ற அதிகாரங்களால் ஆண்களுக்கும் பெண்கள்போலவே கற்பொழுக்கம் வேண்டும் என்ற கருத்தை வெளியிட்டுள்ளார்.

பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் விலைமாதர் கூட்டுறவு வெறுக்கப்படுகிறது.

கம்பன், இராமன் ஏகதார விரதம் உள்ளவன் என்பதை எடுத்துக் காட்டுகின்ருன். இராவணன், இந்திரசித்து போன்றவர்களின் ஒழுக்கமற்ற வாழ்க்கையை விரித்துக் கூறுகின்ருன்.

மக்களின் ஒழுங்கற்ற வாழ்க்கையையும் இலக்கியங்கள் எடுத்துக் காட்டுகின்றன. அவர்கள் ஒழுங்குமுறையைப் பின்பற்றி வாழ வேண்டும் என்னும் அறிஞர்களின் கருத்துக்களையும் இலக்கியங்கள் கூறுகின்றன. இத்தகைய இலக்கியங்கள் மக்கள் வாழ்வோடு ஒட்டி வளர்ந்த இலக்கியங்கள்.

## பிள்ளைப்பேறு.

நாகரிகத் தொடக்க காலத்தில் மக்கள் தனித்தனிக் கும்பல்களாக வாழ்ந்தனர். அக்காலத்தில் வளமுள்ள நிலப்பகுதியிலே வாழ்ந்தவர்களிடம் வறுமையில்லை. வறண்ட பகுதியிலே வாழ்ந்த மக்களிடம வாழ்வுக்குப் போதுமான வசதியில்லை. ஆதலால் வசதியற்றவர்கள், வசதியுள்ளவர்கள் வாழும் பகுதியிலே புகுந்து கொள்ளையடித்தனர். அவர்கள் வாழும் இடத்தைத் தாங்கள் வாழும் இடமாக ஆக்கிக்கொள்ளவும் முயன்றனர். இதனல் அடிக்கடி ஒரு கூட்டத்திற்கும் மற்ரெரு கூட்டத்திற்கும் சண்டைகள் ஏற்பட்டு வந்தன சண்டைக்காக அவர்கள் ஆண்மக்கள் கூட்டத்தைப் பெருக்கவேண்டும் என்று முயன்றனர்.

இட்லர், செருமனி நாட்டில் ஆதிக்கம் பெற்றிருந்த காலத்தில், ஆண்மக்களை மிகுதியாகப் பெறும் பெண்களுக்குப் பாராட்டும், பரிசும் அளித்துவந்தான். முசோலினி இத்தாலியின் தனியதிகாரியாக இருந்த காலத்திலும் இவ்வாறு செய்துவந்தான். போர் வெறியர்களாகிய இவர்களுடைய நோக்கம் சண்டைக்காக ஆண் மக்கள் கூட்டத்தைப் பெருக்கவேண்டும் என்பதுதான். பண்டைக் காலத்தினரும் போருக்காகத்தான் ஆண் பிள்ளைகளை மிகுதியாக விரும்பினர். இந்த உண்மையைப் புறநானூற்றில் உள்ள 'ஈன்று புறந்தருதல் என்றலைக் கடனே' என்ற செய்யுளாற் காணலாம்.

பின்னல் மத நம்பிக்கையும், தெய்வ நம்பிக்கையும் வளர்ந்து பெருகிய காலத்தில் ஆண் பிள்ளை பெறுவதை மதக் கடமையாகவே ஆக்கிவிட்டனர். 'பிள்ளையில்லாதார்க்குப் புண்ணியலோகம்

இல்லை' என்ற கருத்தைப் பரவச் செய்தனர். இத்தகைய கருத்து பழமையான நாகரிகம் பெற்ற எகிப்தியர்களிடம் உண்டு; பழமையான நாகரிகம் பெற்ற சீனர்களிடமும் உண்டு.

பெற்றோர்களுக்காகச் சிரார்த்தம் முதலிய சடங்குகள் செய்வது பகுத்தறிவுக்குப் பொருந்தாது என்று கருதப்படலாம். முன்னோர்களுக்கு மதிப்புக் காட்டும் முறைகளில் இது ஒன்று. பழமையான நாகரிகம் பெற்ற சமுதாயத்தில் முன்னோர்களை வணங்கும் முறை குடிகொண்டிருக்கின்றது. எகிப்தியரிடம் இம்முறை உண்டு; சீனரிடம் இம்முறை உண்டு.

பழந் தமிழரும் முன்னோர்களை வணங்கிவந்தனர். வீரர்களுக்குக் கல் நடும் வழக்கம் இருந்ததொன்றே இதை மெய்ப்பிக்கும். இந்த முறையிலிருந்துதான் இறந்தோர் பொருட்டுச் செய்யும் சடங்குகள் பிறந்தன. முன்னோரைப் போற்றுவதற்கு சிரார்த்தம் செய்வது போன்ற சடங்குகளையும் தமிழர்கள் பின்பற்றி வந்தனர்.

இம்மை உலகத்து இசையொடும் விளங்கி
மறுமை உலகமும் மறுஇன்று எய்துப
செறுநரும் விழையும் செயிர்தீர் காட்சிச்
செல்வர்ப் பயந்த செம்மலோரே (அகம் 66)

தென்புலம் வாழ்நர்க்கு அருங்கடன் இறுக்கும்
பொன்போல் புதல்வர்ப் பெருதீரும் (புறம்)

என்ற சங்கச் செய்யுட்கள் இவ்வுண்மையை விளக்குகின்றன.

தென்புலத்தார், தெய்வம், விருந்து, ஒக்கல், தான்,
ஐம்புலத்து ஆறு ஓம்பல் தலை. [என்று ஆங்கு

என்ற திருக்குறளும் பண்டைத் தமிழர் நாகரிகத்தின் உண்மையை எடுத்துக்காட்டுவதுதான். இந்த வரலாற்றுண்மையை உணராமலோ அல்லது மறைத்தோதான், 'தென்புலத்தார்' என்பதற்கு என்னென்னவோ பொருள் கூறுகின்றனர். பிதிரர்களை வணங்கும் வழக்கம் தமிழர்களின் பழய வழக்கமேயன்றி யாராலும் புதிதாகப் புகுத்தப்பட்டது அன்று; வணங்கும் முறையிலே மாற்றம் பிறந்திருக்கலாம். மாற்றம் ஏற்படுவது இயற்கை. இந்த உண்மைகளையும் இலக்கியங்கள் எடுத்துரைக்கின்றன. இவ்விலக்கியங்கள் மக்கள் வாழ்வோடு சேர்ந்து வளர்ந்த இலக்கியங்களாகும்.

## மதச்சண்டைகள்.

பழந்தமிழ் மக்கள்—சங்க கால மக்கள்—ஒன்றுகூடியிருந்தனர். அவர்களிடம் தெய்வ நம்பிக்கை குடிகொண்டிருந்தது. முருகன், திருமால், சிவன், நான்முகன், இந்திரன், பலதேவன், ஐயை முதலிய தெய்வங்களை வணங்கிவந்தனர். ஆயினும் அவர்களுக்குள், 'என் தெய்வம் பெரிது, உன் தெய்வம் சிறிது' என்ற போராட்டம் இல்லை. சமணம், பௌத்தம் போன்ற மதங்கள் பரவிய காலத்திலும் சண்டை சச்சரவின்றி வாழ்ந்தனர். இந்த வாழ்வைச் சங்க நூல்கள் நமக்கு உணர்த்துகின்றன.

கி. பி. ஆறும் நூற்றாண்டுக்குப் பின்னர்தான் தமிழகத்திலே மதச் சண்டைகள் வலுத்தன வேத நெறியை அடிப்படையாகக் கொண்டவர்கள் சைவர்களும் வைணவர்களும் ஆவர். இவர்கள் ஒன்றுபட்டு நின்று சமண, பவுத்த மதங்களை எதிர்த்தனர்; சமண பவுத்த மதச் செல்வாக்குகளும் ஒழிந்தன. இந்த உண்மையை நாயன்மார்கள், ஆழ்வார்கள் பாடல்கள் இலக்கியமாக நின்று காட்டுகின்றன.

சமண, பவுத்த மதச் செல்வாக்கு ஒழிந்தபின்னர், சைவர்களும் வைணவர்களும் தங்களுக்குள் சண்டைபோட்டுக்கொள்ளத் தொடங்கினர். இக்காலத்தில்தான் சைவமத தத்துவங்களும், வைணவ மத தத்துவங்களும் பிறந்தன. இருசாராரும், தங்கள் தங்கள் மதத்தைப் பற்றியும், தெய்வங்களைப்பற்றியும் புராணங்களும், கவிதைகளும் எழுதிக் குவிப்பதிலே ஈடுபட்டனர். ஒருவர் ஒருவரை, வெறுத்தும், இழித்தும் பாடினர்; மத வெறுப்பை வளர்த்தனர். இத்தகைய மத இலக்கியங்களிலே பல, இன்றும் சிறந்த இலக்கியங்களாக நின்று நிலவுகின்றன.

இத்தகைய மதச் சண்டைகள் இல்லாமல் மக்கள் ஒன்றுபட்டு வாழவேண்டும் என்று பல புலவர்கள் கருதினர். இவர்களிலே தலைசிறந்தவன் கம்பன். அவன் இயற்றிய காவியம் வைணவ காவியந்தான். கம்பனும் வைணவ பக்தன்தான். ஆயினும் கம்பன் காவியத்திலே எந்த இடத்திலும் சிவபெருமான் இழித்துக் கூறப்படவில்லை. ஏற்றங் கொடுக்கவேண்டிய இடங்களில் ஏற்றங்கொடுத்தே பாடியிருக்கின்றான்.

கம்பனுடைய சமரச நோக்கத்திற்கு ஒரு பாட்டுப் போதுமானது.

> "அரன்அதிகன் உலகளந்த அரிஅதிகன்
> என்று உரைக்கும் அறிவிலோர்க்குப்
> பரகதி சென்று அடைவரிய
> பரிசே போல்"

என்று சொல்லும் செய்யுள் ஒன்றே போதும்.

கம்பனுக்குப் பின்னே தோன்றிய பல அறிஞர்களும் மத ஒற்றுமைக்காக உழைத்திருக்கின்றனர்.

திருமூலர், சித்தர்கள், தாயுமானர், இராமலிங்கர், பாரதியார் போன்றவர்கள் மதவெறுப்பற்றவர்கள். மக்கள் சாதிமத வெறுப்பின்றி ஒன்றுபட்டு வாழவேண்டும் என்று உணர்ச்சியுடன் பாடியிருக்கின்றனர். மதங்கள் பலவாக இருந்தாலும், தெய்வங்கள் வெவ்வேறாக இருந்தாலும் மக்கள் சண்டை அடித்துக்கொள்ளாமல் ஒன்றுபட்டு வாழலாம் என்று நம்பினர். மக்களின் இந்த நம்பிக்கையை அடிப்படையாகக்கொண்டு எழுந்த நூல்கள் பல. அவைகள் கம்பர் கால முதல் இன்றுவரையிலும் பிறந்து வளர்ந்துகொண்டே வருகின்றன இவைகள் எல்லாம், மக்கள் வாழ்வோடு ஒட்டிப்பிறந்த இலக்கியங்கள்.

**இலக்கியத்திற்கு வழிகாட்டிகள்.**

மக்கள் வாழ்க்கையை ஒட்டியே இலக்கியங்கள் எழுதவேண்டும். இவ்வாறு எழுதப்படும் இலக்கியங்கள்தாம் என்றும் உயிருள்ள இலக்கியங்களாக மக்களிடையிலே நடமாடும். இந்த நாட்டில் மட்டும் அன்று, ஒவ்வொரு நாட்டிலும், அறிஞர்கள் தாங்கள் வாழ்ந்த காலத்து மக்களின் எண்ணங்களேயும், நோக்கங்களேயும் வெளியிடும் முறையிலேயே இலக்கியங்களே எழுதியிருக்கின்றனர்.

நமது நாட்டில் பண்டைக்காலத்திலும் மக்கள் வாழ்க்கையைப் பின்பற்றும் புலவர்கள் இருந்தனர். நமது காலத்திலும் இருந்தனர். இப்பொழுது இருக்கின்றனர் என்று சொல்ல நாவெழவில்லே.

காவியம் செய்வதற்கு இளங்கோ அடிகளும், சாத்தனுரும் வழி காட்டியிருக்கின்றனர். சிலப்பதிகாரத்தை இயற்றிய இளங்கோ அடிகள் எடுத்தவுடனே கதையைத் தொடங்கிவிடுகிருர். அரச வாழ்த்தாக வாழ்த்துப்பாட்டுகள் கூறுவதோடு சரி. அவ்வாழ்த்துக் களும் ஆழ்ந்த கருத்தோடு படிப்பதற்கு இனிமையாக அமைந்திருக் கின்றன.

மணிமேகலே ஆசிரியர் சாத்தனுரும் இதே முறையைத்தான் பின்பற்றுகிருர். எடுத்தவுடன் கதைத் தொடக்கம். விழாவறை காதைதான் மணிமேகலேயின் முதற்காதை.

பிற்காலத்துக் காவியங்களில், புராணங்களில், முதலிற் கடவுள் வாழ்த்து; இரண்டாவது நாட்டுப் படலம்; நாட்டுப்படலத் தில் ஐவகை நிலச் சிறப்பு; அதன்பிறகு நகரப்படலம்; நகரப் பட லத்தில் ஒவ்வொரு தெருவாகப் புலவன் புகுந்து புறப்படுவான். பரத்தையர் வீதியிலே புகுந்து அவர்களேப் பற்றியும் பாடாமல் விட மாட்டான். இவைகளேயெல்லாம் படித்துவிட்டுக் கதையைத் தொடு வதற்குமுன் சலிப்புத் தட்டிவிடும். கம்பன்கூட இந்தப் பிற்கால முறையைத்தான் பின்பற்றியிருக்கின்ருன். இளங்கோவும் சாத் தனுரும் காட்டிய வழியைப் பிற்காலப் புலவர்கள் ஏன் மறந்தனரோ?

சிலப்பதிகாரமும், மணிமேகலேயும் வெறும் 'ராஜா மந்திரி' கதைகளாக இல்லே; வெறும் புராணக் கதைகளாகவும் இல்லே. குடும்ப நிகழ்ச்சியை விளக்கும் கதைகளாக இருப்பது குறிப்பிடத் தக்கது. ஆயினும், அக்கதைகளிலே, அரசர்களும் இணேக்கப்பட் டிருக்கின்றனர்; தெய்வச் செயல்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இவைகள் அக்கால மக்களின் மனப்போக்கை ஒட்டியே அமைந்தன வாகும். தெய்வமும், அரசர்களும் இணேக்கப்பட்ட கதைகளேயே அக்கால மக்கள் சிறந்தனவென்று கருதினர்; விரும்பிப் படித்தனர். ஆதலால்தான் குடும்ப நடவடிக்கையைக் கொண்ட காவியங்களான சிலப்பதிகாரத்திலும், மணிமேகலேயிலும், அரசர்களின் வாழ்வும், தெய்வச் செயல்களும் கலந்து வந்தன.

இடைக்காலத்திலே காவியம் செய்வதற்குக் கம்பன் வழி காட்டினன். இராமாயணம் வடநாட்டுக்கதைதான். ஆயினும்

தென்னாட்டுடன் தொடர்புள்ளது. கம்பர் காலத்திலே தமிழ் நாட்டினர் இராமாயணத்தைப் போற்றிப் புகழ்ந்தனர். தமிழ் மக்கள் இராமாயணத்தைப் படிப்பதிலும், கேட்பதிலும் ஆவல்கொண்டிருந்தனர். இந்த நிலையைக்கண்ட கம்பன் இராமாயணக் கதையையே பாட எடுத்துக்கொண்டான்; தமிழர் பண்பாட்டைப் புகுத்தினான்; சுவையுள்ள காவியமாகப் பாடினான். அன்று முதல் இன்றுவரையிலும் கம்பன் கவிதை பாராட்டப்படுகிறது.

தமிழர்கள் தந்நலந்துறந்து பிறர்நலத்திற்குப் பாடுபடுவதிலே பின்வாங்காதவர்கள்; பிறர் நன்மைக்காக எத்தகைய தியாகத்தையும் செய்வார்கள். இப்பண்பாட்டையே இராமனாகக் காட்டினான் கம்பன். எல்லாம் தனது இன்பத்திற்கே என்று நினைக்கின்றவன், செய்கின்றவன் மனிதத் தன்மையுள்ளவன் அல்லன்; அவன் மனித சமுதாயத்திலிருந்தால் அது மனித சமுதாயத்துக்கே மானக்கேடு. கம்பன் இக்கருத்தையே இராவணனாக வைத்தான். தன்னலத்தை இராவணனாகவும், தியாகத்தை இராமனாகவும் வைத்துக் காட்டும் காவியம் இராமாயணம். தன்னலத்தை வெறுப்பதும், தியாகத்தைப் போற்றுவதும் தமிழர் பண்பாடு.

எத்தனையோ பேர் கம்பனைச் சுடவேண்டும்; கிழிக்கவேண்டும்; புதைக்கவேண்டும் என்று சொல்லியும் அவனை ஒன்றும் செய்ய முடியவில்லை. கம்பன் காலத்துத் தமிழ் நாட்டுப் பண்பாட்டை அவன் கவிதைகள் காட்டுகின்றன. அக்காலத்து மக்களின் எண்ணங்களை வெளியிடுகின்றன. ஆகையால்தான் கம்பன் காவியம் எத்தகைய எதிர்ப்புக்கும் தலைவணங்காமல் நிமிர்ந்து நிற்கின்றது. இலக்கியக் கூட்டத்திலே ஏறுநடை போடுகின்றது. தமிழ் உள்ள வரையிலும் கம்பனைக் கொல்லமுடியாது. அவனை இந்நாட்டைவிட்டு வெளியேற்றவும் முடியாது.

இக்காலத்திலே நமக்கு இலக்கியம் இயற்ற வழிகாட்டியவர் பாரதியார். நமது நாட்டு மக்கள் தமது அடிமை விலங்கை முறித்தெழுந்து உரிமை பெறப் போராடினர்; அவர்களுடைய உரிமை உணர்ச்சியைப் பாடல்கள் வடிவாகச் செய்துகொடுத்தார். அந்த உரிமைப் பாடல்கள் என்றும் அழியாமல் நிலைத்து நிற்பவை. பின்னாளில் நமது உரிமைப் போராட்ட வரலாற்றை விளக்கும் தூண்களாக நிலைத்து நிற்பன.

கம்பன் காட்டிய வழியைப் பின்பற்றித்தான் 'பாஞ்சாலி சபதத்''தை எழுதினார் பாரதியார். 'புதிய மொந்தையில் பழய கள்' என்றொரு பழமொழியுண்டு. 'பழய மொந்தையிலே புதிய கள்' என்ற புதுமொழியை உண்டாக்கியவர் பாரதியார்.

"பாஞ்சாலி சபதம்" பழய பாரதக் கதையின் பகுதிதான். மக்களுக்குத் தந்நம்பிக்கை வேண்டும்; அரசர்கள் அதிகார வெறியர்கள்; அரசர்களோ, அரசாங்கங்களோ மக்கள் உரிமையை நசுக்கும்போது மக்கள் அஞ்சக்கூடாது; அந்த அடக்குமுறையை பேடித்

தனத்துடன் பார்த்துக்கொண்டிருக்கக்கூடாது. தங்கள் குடி உரிமையை (பிரஜா உரிமையை) நிலைநாட்டவேண்டும்." என்பன போன்ற கருத்துக்களை யெல்லாம் பாஞ்சாலி சபதத்திலே பாடியிருக்கின்றார். கதை, யாருடையதாய் இருந்தால் என்ன? கருத்துத்தான் சிறந்திருக்கவேண்டும். இதற்குப் பாஞ்சாலி சபதம் எடுத்துக்காட்டு.

புதிய இலக்கியம் செய்வதற்கும் வழிகாட்டியிருக்கிறார் பாரதியார். தமிழிலே பள்ளு என்ற ஒருவகை இலக்கியம் உண்டு. ஏறக்குறைய இருநூற்று ஐம்பது ஆண்டுகளுக்கு முன்புதான் இத்தகைய இலக்கியம் பிறந்தது.

பள்ளு என்பது உழவனைப்பற்றியும், நிலக்கிழவரைப் பற்றியும் கூறுவது. "முக்கூடல் பள்ளு" என்பது சிறந்ததாகக் கருதப்படுகின்றது. இதுபோன்ற பள்ளுகள் பலபெயரில் இருபத்து நான்கிற்கு மேல் இருக்கின்றன. இப் பள்ளுநூல்கள் உழவனுடைய அடிமை வாழ்வையும், பண்ணையார் — நிலக்கிழவர் என்பவரின் சுரண்டலையும், அதிகார வெறியையும் எடுத்துக்காட்டுவன. பெரும்பாலும் எல்லாப் பள்ளுகளும் ஒரே கதை அமைப்பைக் கொண்டவை. இந்தப் பள்ளுநூல்கள் நமது நாட்டில் தோன்றுதொட்டு நிலைத்து வந்த உழவர் – நிலக்கிழவர் வாழ்வைத்தான் உணர்த்துகின்றன.

பயிர் செய்யும் முறை, மாடுகளின் வகை, நிலத்தின் தரங்கள், நெல்லின் வகைகள் போன்ற பல செய்திகள் இந்நூல்களில் வருகின்றன. ஆயினும் பள்ளுநூல்களின் அடிப்படை இக்காலத்தில் மாறிவிட்டது. உழவன் அடிமையாக இருந்த காலத்தில் செய்யப்பட்டவை அவை; அத்தகைய பள்ளுநூல்கள் இக்காலத்தில் இயற்றப்பட்டால் அவைகளை மக்கள் மதிக்கமாட்டார்கள். இலக்கிய வரிசையிலும் சேரமுடியாது. ஆகையால் இக்காலத்தின் உழவர்களின் உரிமை உணர்ச்சியை அமைத்துப் புதிய பள்ளுகள் பிறக்கவேண்டும். இது பாரதியார் கருத்து. இக்கருத்தே அவரை "ஆடுவோமே பள்ளுப்பாடுவோமே" என்ற சுதந்தரப் பள்ளைப் பாடத் தூண்டியது. ஆயினும் பழைய பள்ளுநூல்கள் நமக்கு இலக்கியமாகப் படிக்கப் பயன்படுகின்றன.

இளங்கோ, சாத்தனர், கம்பர், பாரதியார் முதலிய பேரறிஞர்கள் காட்டிய வழிகளைப் பின்பற்றி இலக்கியங்கள் பிறக்கவேண்டும். இவைகள் இக்காலத்து மக்களின், சமூகவாழ்வு; எண்ணங்கள்; நோக்கங்கள்; முயற்சிகள்; கொள்கைகள்; உழைப்பு; நடவடிக்கைகள் இவைகளை வெளியிடவேண்டும். இந்தக் காலத்துத் தமிழ் மக்களின் வாழ்வைப் பற்றி இன்னும் ஆயிரம் ஆண்டுகளுக்குப்பின் வரும் நமது மக்கள் தெரிந்துகொள்ள வேண்டும்.

இவ்வாறு மக்கள் வாழ்வை ஒட்டி எழுதப்படுவனதாம் சிறந்த இலக்கியங்களாகும். அழியாமல் மறையாமல் உயிருடன் வாழும் இலக்கியங்களாகும். இவைகளே சிரஞ்சீவி இலக்கியங்கள் என்று போற்றப்படும்.

சென்ற இதழின் தொடர்ச்சி

# தொல்காப்பியம்

## சொல்லதிகாரம்

## சேனாவரையருரை விளக்கம்.

[பண்டித. சித. நாராயணசாமி, திருவையாறு.]

---

மக்கட்சாதி=மக்களிடத்தினிற்குஞ் சாதி. சிறந்தமையின்=(விலங்கு முதலியவற்றினிற்குஞ் சாதியினடங்காது, தக்க இன்ன தகாதன இன்ன எனப் பகுத்துணருமாறு முணர்வுடன் கலந்து) தனிப்பட்டமையால்; உயர்ந்தமையால்; (உயர்வு தொடக்கத்திலேயே யமைந்தமையால்.) சாதி = பலவற்றின்க ணிருக்கும் பொதுத்தன்மை. 'உயர்திணை' யென்பது முதலியவற்றை, இருபெயரொட்டி நின்று பிறிது பொருளுணர்த்துதலால் சேனாவரையர், அன்மொழித்தொகையெனவும் பெயராக நிற்றலால் இருபெயரொட்டாகுபெயரெனவுங் கருதுவர்.

இதுபோன்றவை தனிச், சொல்லாற்றலாற் பிறிது பொருளுணர்த்தாமல் தொகையாற்றலால் பிறிது பொருளுணர்த்தலால் அன்மொழித் தொகை யென்பதற்கேற்புடையனவாக அமைந்து, தொழிலைக் காலமொடு தோன்ற வுணர்த்தாமையால் வினையெனப்படாமலும் தம்பொருளையன்றிப் பிறிது பொருளுணர்த்துதலால் இயற்பெயரெனப்படாமலும் நிற்றலாலும் தனிப்பெயராகவன்றி இருபெயராக நின்று பிறிது பொருளுணர்த்துதலாலும் தனித்த ஆகுபெயரெனப்படாமல் இருபெயரொட்டாகுபெயரெனப்படும் என்பது தொல்காப்பியர் கருத்தாகும் எனச் சேனாவரையர் கருதுகின்றனரென்பதை "முதலிற்றோன்றும் சினையறிகிளவியும் (வேற்றுமை மயங்கியில்—௩௰௧.) என்னு நூற்பாவுரையாலறியலாம்.

சிலர், '**வகரக்கிளவி**' யென்பதில் முன்னின்ற '**வகரம்**' **என்பது பின்னிற்கும்** '**கிளவி**' யென்னுமாகுபெயராலுணர்க்

---

[90-ஆம் பக்கத் தொடர்ச்சி]

மக்கள் வாழ்வை ஒட்டாமல் தனித்துச் செல்லும் கதைகள், கவிதைகள் இலக்கியங்களாக நிலைநிற்க முடியாது. அவைகள் அழிந்துதான்போகும். ஆகையால் மக்கள் வாழ்வை ஒட்டிய-மக்கள் வாழ்வுக்கு வழிகாட்டக்கூடிய-உயர்ந்த இலக்கியங்களை உண்டாக்க முயல்வதே அறிஞர்களின் கடமையாகும். மக்கள் வாழ்வின் வளத்தை ஒட்டியே இலக்கியங்களும் வளரும், தோன்றும், என்ற உண்மையையும் மறந்துவிட வேண்டாம். இலக்கியம் வளம்பெற மக்கள் வாழ்வும் வளம்பெறவேண்டும்.

---

தப்படும் 'எழுத்து' என்னு மாகுபெயர்ப் பொருட்கு அடையாக நிற்றலால் 'வகரக்கிளவி' யென்பது இருபெயரொட்டாகுபெயராகும். இதுபோல்வன எல்லாம் இருபெயரொட்டாகுபெயரே. பொற்றொடி, உயர்திணை யென்பனவற்றுள் முன்னின்ற பொன் உயர்வு என்பன தொடியை யுடையாளையும் திணையையுடைய பொருளையும் முறையே சிறப்பியாமையால், தொடியும் திணையுமாகிய இயற்பெயர்ப் பொருளையே சிறப்பித்து நிற்றலால் அவையும் அவைபோல்வனவும் அன்மொழித்தொகையாகும். அன்மொழித் தொகைவேறு ஆகுபெயர் வேறு என்பர்.

அவர் 'வகரக்கிளவி' 'அதுவாகுகிளவி' என்பன முதலியவற்றுள் வரும் 'கிளவி' யென்பது இயற்பெயராக நின்று எழுத்தையும், பொருளையும் உணர்த்தவில்லை, ஆகு பெயராக நின்று அவற்றை யுணர்த்துகின்றது எனக்கொண்டமையால் அங்ஙனங் கருதுகின்றனர்.

நன்னூல் விருத்தியுரையில் 'மொழி' 'சொல்' என்பனவற்றைக் காரண இடுகுறி பெயர்க்குக் காட்டாகக் காட்டியிருக்கின்றனர். சேனாவரையரும் 'மொழி, கிளவி, சொல்' என்பன காரணங் கருதாத பொழுது இடுகுறி யளவாக நின்று எழுத்தானமைந்து பொருளை யறிவிக்கும் ஒலியை (சொல்லை)யே யுணர்த்துமாயினும் காரணங் கருதியபொழுது மொழியப்படும் எழுத்தையும் மொழியான் மொழியப்படும் பொருளையும் உணர்த்துவனவாக நிற்றலால் ஆசிரியர் தொல்காப்பியர் 'வகரக்கிளவி நான்மொழியீற்றது" (தொல் - எழுத் - மொழிமரபு) "சகரக்கிளவியு மவற்றோரற்றே" (தொல்-எழுத்-மொழிமரபு) என்னுமிடங்களில் 'கிளவி' யென்பது இயற்பெயராக நின்று "எழுததையும்" "அதுவாகுகிளவி" என்பது முதலிய இடங்களில் 'கிளவி' யென்பது இயற்பெயராகவே நின்று பொருளையும் உணர்த்துமாறு கூறினர். ஆகுபெயராக நின்றவற்றை யுணர்த்துமாறு கூறினரில்லையென நுணித்துணர்ந்தமையால் 'வகரக்கிளவி' 'அதுவாகுகிளவி' என்பனபோல்வனவற்றை ஆகுபெயராகக் கொள்ளாது காரண இடுகுறிப் பெயராகிய இயற்பெயராகக் கொண்டனர். அவ்வாறு கொண்டனரென்பது "அதற்கு வினையுடைமையின்" (தொல்-சொல்-வேற்றுமையியல் ௰௫.) என்னு நூற்பாவுரை முதலியவற்றில் 'கிளவி = பொருள்' என எழுதுதலாற் புலப்படும். இவ்வாறு கிளவி யென்பது இயற்பெயராக நின்று 'எழுத்து, பொருள்' என்பனவற்றை யுணர்த்துமெனக்கோடற் கிடமிருத்தலா லதனை ஆகுபெயரெனக்கொண்டு அதுபோன்றன இருபெயரொட்டாகு பெயராகுமெனல், நிலை

பொருதுபோய்விடுமாதலால் அன்மொழித்தொகையே, பெயராகக் கருதுமிடத்து இருபெயரொட்டாகு பெயராகும் எனச் சேனாவரையர் கருத்துப் பொருத்தமுடையதாகும். ஆகுபெயர் வேறு இருபெயரொட்டாகு பெயர் வேறு என்னல் சாலும்; இருபெயரொட்டாகு பெயர் தொகையாற்றலாற் பிற பொருளுணர்த்தலாலென்க.

'இசைக்கும்' என்பது இங்கு உரைக்கும் (உணர்த்தும்) என்னும் பொருளில் வாராமல் *நிகழும் என்னும் பொருளில் வரவே ஆசிரியர் தொல்காப்பியர் யாத்தன ரென்பது பின்னர் "ஈறறிநின்றிசைக்கும் பதினோரெழுத்தும்" (தொல்-சொல்-கிளவி) "பால்பிரிந்திசையா வுயர்திணைமேன" தொல்-சொல்-கிளவி) "இசைத்தலுமுரிய வேறிடத்தான" (தொல்-சொல்-கிளவி) எனவும் முன்னர் எழுத்ததிகாரத்தில், "மூவளபிசைத்த லோரெழுத்தின்றே" (தொல்-எழுத்-நூன்மரபு) "அரையளபு குறுகன் மகரமுடைத்தே யிசையிடனருகுந் தெரியுங்காலை" (தொல்-எழுத்-நூன்மரபு) "எழுந்துபுறத்திசைக்குந்" (தொல்-எழுத்-நூன்மரபு) "ஓரெழுத் தொருமொழி யீரெழுத் தொரு மொழி யிரண்டிறந்திசைக்குந் தொடர்மொழி" (தொல்-எழுத்-மொழிமரபு) "மொழிப்படுத் திசைப்பினும் தெரிந்துவேறிசைப் பினு மெழுத்தியல் திரியா தென்மனார் புலவர்" (தொல்-எழுத்-மொழிமரபு) எனவும் வருவன முதலியவற்றாலும் "வினை வேறு படாப் பலபொருளொருசொல் நிலையுங்காலைக் கிளந்தாங்கியலும்" (தொல்-சொல்-கிளவி) "குடிமை யாண்மை யிளமை மூப்பே......அஃறிணை மருங்கிற் கிளந்தாங்கியலும்" (தொல்-சொல்-கிளவி) என வருவன முதலியவற்றால் வெளிப்பட "இயலும்" (நிகழும்) எனக் கூறுதலானும் பெறப்படும். அவ்வாறு பெறப்படுதலானும் 'உயர்திணை மருங்கினிலையின வாயினு மஃறிணை மருங்கிற கிளந்தாங்கியலும்" என்பதுபோல இரு திணைப்பொருளுஞ் சொல்நிகழ்ச்சிக் கிடமாகுமென்பது தோன்ற நீள 'மருங்கு' என்னும் மொழியானும் 'வயின' என்னும் மொழியானும் பிறவற்றாலும் பெறப்பட ஆசிரியர் கூறியிருத்தலானும் உரையாசிரியர் "திணையொடு பழகிய பெயரலங் கடையே" (தொல்-சொல்-பெயரியல்) என்பதனுரையில் "காளை விடலை' யென்பன உயர்திணையினும் அஃறிணையினும் வருமாதலின்" எனவும் "அவற்று ளியற்சொற்றாமே" (தொல்-சொல்-எச்சவியல்) என்னு நூற்பாவினுரையில் 'தம்பொருள் வாழாமை யிசைக்குஞ் சொல்லே" என்பதற் குரையெழுதுங்கால் "தம்

* சொல்லிற்கும் எழுத்திற்கும் ஒலித்தலே நிகழ்தலாகுமாதலின் "இசைக்கும்" என்பதற்கு நிகழுமென எழுதல் பொருந்துமாறறிக.

பொருள் வழுவாம னடக்குஞ் சொல்" எனவும் பொருள் சொன்னிகழ்ச்சிக்கு இடமாகு என்பதும் 'இசைக்கும்' என்பது 'நிகழும்' என்னும் பொருளுடையதாகுமென்பதம் படஎழுதத லானும், இன்னுமவரே 'இன'சாரியை நிற்கு*மிடங்களில் ஏழாம் வேற்றுமை விரித்தற்கேற்ப வுரையெழுதுதலானும், எழுத்ததி காரத்தில் தொகைமரபில் "மெல்லெழுத்து மிகும்வழி வலிப் பொடு தோன்றலும்" என்னும் நூற்பாவில் "சாரியையுள் வழித்தன்னுருபு நிலையலும்" என இரண்டாம் வேற்றுமை யுருபு சாரியை வெளிப்பட்டு நிற்கும்போது தானும் வெளிப் பட்டே நிற்கும் என அதனியல்புணர்ந்து விதித்திருத்தலானும் "ஒருமையெண்ணின பொதுப்பிரிபாறசொ லொருமைக்கல் லது எண்ணுமுறை நில்லாது" (தொல்-சொல்-கிளவி) என ஓரோவழிச் சாரியை நிற்க இரண்டனுருபு வெளிப்படாது நின் றலைக்கொண்டு யாண்டும் அவ்வாறு வாராமெனல் சாலாதாகலா னும் யாண்டு மவ்வாறு வாராமெனில் வெளிப்பட விதிகூறியிரா ராகலனும், ஈங்கு இரண்டாம வேற்றுமையை விரிக்கலாமே யென்பதற் கிடமின்மையானும், விதிப்படி பொருள் கொள்ள இடமில்லையேல் அன்றோதா திறுகிய ஆட்சிப்படி கொள்ளுதல் பொருந்துமன்றி, யாண்டும பொருந்தாமையானும் சொற்கள் பொருள்களை யுணர்த்து மென்பது "எல்லாச் சொல் லும் பொருள் குறித்தனவே" (தொல்—சொல்—பெயரியல்) என்பது முதலியவற்றால் வெளிப்படவும் குறிப்பாகவுங் கூறி யிருத்தலானும் *சொற்கள் பொருள்களை யிடமாகக்கொண்டு நிகழுமென்பதைப் பல இடங்களிற் குறிப்பாகக் கூறியவர் வெளிப் படக் கூறுதலு மின்றியமையாத தொன்றாகலானும் சொற்கள் பொருள்களை யெவ்வகையா னுணர்த்துகின்றன என எழும் வினா விற்குச் சொற்கள் பொருள்களை யாதாரமாகக் கொண்டிருத் தலால் அவற்றை யுணர்த்துகின்றன எனல் வேண்டு மாகலானும் "சொன்னிகழ்ச்சிக்குப் பொருளிடமாகலின், ஆயிருதிணை யின்கண் என ஏழாவது விரிக்க." என்றனர்.

இனி, நச்சினார்க்கினியர், "ஆயிருதிணையி னிசைக்கு மன சொல்லே" என்பதற் குரையாசிரியர் உரையைப் பின்பற்றி

---

* "வினையிற்றோன்றும்" (தொல்-சொல்-கிளவி) "செப்பினும் வினாவினும்" (தொல்-சொல்-கிளவி) "ஒருவரைக்கூறும் பன்மைக் கிளவியும், ஒன்றனைக் கூறும் பன்மைக் கிளவியும், வழக்கினாகிய" (தொல்-சொல்-கிளவி) "செலவினும் வரவி னுந்தரவினுங் கொடையினு நிலைபெறத் தோன்றும்" (தொல்-சொல்-கிளவி) "காப்பினொப்பி னூர்தியினிழையின் ஒப்பிற் புகழிற் பழியினென்றா" (தொல்-சொல்-வேற்றுமையில்) என்னுமிட முதலியன.

* பெயர்களையும் வினைகளையுங் கூறுமிடத்து 'உயர்திணைக் குரிமையும் அஃறிணைக் குரிமையம் ஆயிருதிணைக்குமோரன்ன வுரிமையும் அம்மூவுருபின தோன்ற லாறே" எனப் பெயரியலிலும் வினையியலிலுங் கூறியது. பெயர் வினைச்சொற்கள் இருதிணைப் பொருளையும் பற்றி அவற்றையே உணர்த்தி நிற்றலாலேயாமென்க.

"அவ்விருதிணைப் பொருள்களையு முணர்த்துஞ் சொற்கள்" என எழுதி, 'சொல்லுக்குப் பொருளுணர்த்தும் வழியல்ல திசைத்தல் கூடாமையின் 'இசைத்தல' என்பது "உணர்த்தல்" என்னும் பொருளுடையதாகும். இவ்வாறு இசைத்த லென்பது உணர்த்தல் என்னும் பொருளைத் தருதலால் "ஆயிரு திணையின்" என்பதற்கு 'ஆயிருதிணையினை' என இரண்டாம் வேற்றுமை விரியாமல் 'ஆயிருதிணையின்கண்' என ஏழாம் வேற்றுமை விரித்தால் சொற்கள் இருதிணையையு மிடமாகக் கொண்டு வேறுபொருளை யுணர்த்துமெனப் பொருள்படும். உணர்த்தப்படுவன இருதிணையை யன்றிப் பிறவின்மையால் இரண் டாம் வேற்மையை விரித்தலே பொருந்தும் ஏழாவதை விரித்தல் பொருந்தாது' என்னுங் கருத்துப்பட எழுதுகின்றனர்.

சேனாவரையர் இசைத்தல் என்பதற்கு உணர்த்தல் எனப் பொருள் கூறியிருப்பின் இவர் மறுப்புப் பொருந்தும். அன்றி 'இசைத்தல்' என்பது உணர்த்தல் என்னும் பொருளிற்றான் வந்துள்ளதென்றால் "அஃறிணை மருங்கிற் கிளந்தாங் கியலும்" என்னுமிடத்தும் பிறஇடத்தும் 'இயலும்' என்பதும் அப் பொருளில் வந்ததெனல் வேண்டும். அவ்வாறு வந்ததெனக் கூற இயலாதாகையாலும் ஆசிரியர் தொல்காப்பியர் "இசைக் கும்" என்பதை உணர்த்தும் பொருட்டு ஆண்டனரென்றால், இடர்ப்படாதபடியவர் "ஆயிருதிணையினுரைக்குமன சொல்லே" எனவோ 'உணர்த்துமன சொல்லே' எனவோ கூறியிருப்பர் அங்ஙனங் கூறாமையாலும் ஆவினைப் பற்றுக்கோடாகக் கொண்ட அலைதாடி கோடுகள் ஆவினையே யுணர்த்தல் போலப் பொருள் களைப் பற்றுக்கோடாகக் கொண்ட சொற்கள் பிறவற்றை யுணர்க் தாமல் பொருள்களையே புணர்த்தவல்லன என்பதற்குத் தடை யின்மையாலும், ஆதாரமாகக் கொண்டவை ஆதாரத்தை விட்டுப் பிறவற்றை யுணர்த்தல் வேண்டும் என்னு நியதி யின்மையானும் 'இசைப்பிசையாகும்' (தொல் – சொல் – உரி) என்பது 'பசப்பு நிறனாகும்' (தொல் – சொல் – உரி) என்னுமிடத்துப் 'பசப்பு' என்பது நிறத்தை யுணர்த்துவதுபோல இசைப்பு என்பது இசையை (சிறப்பான இசையை) உணர்த்துமென வுணர்த்த வந் ததே யல்லாமல் உணர்த்துமென்னும் பொருளில் வாராமையா னும் "இசை" யென்பது சிறப்பான இசையை யுணர்த்துமென் பது "துவைத்தலுஞ் சிலைத்தலும் இயம்பலு மிரங்கலு மிசைப் பொருட்கிளவி" (தொல் – சொல் – உரி) "கம்பலை சும்மை கலியே யழுங்கல் என்றிவை நான்கும் "அரவப் பொருள" என வேறு பிரித்துக் கூறுதலா லறியப்படுதலாலும் "இசைப் பிசையாகும்" என்னுமிடத்து 'இசை' யென்பது சொல்லைக்

குறிக்கின்றதென்றால் அங்கு நச்சினார்க்கினியர், சேனாவரையர் போல "வாயிற்றோன்றி யாழிசையூப்புக்கு" எனக் காட்டுக் காட்டுதல் பொருந்தாதாகலானும் 'யாதெவனென்னுமாயிரு கிளவியும் அறியாப் பொருள்வயிற் செறியத்தோன்றும்" (தொல் – சொல் – கிளவி) என்பது முதலிய நூற்பாக்களில் சொற்கள் பொருள்களைப் பற்றுக்கோடாகக்கொண்டு அவற்றை யுணர்த்துமென்பது பெறப்பட ஆசிரியர் கூறியிருத்தலானும் இன்னு மவரே தோன்றும் இயலும் இசைக்கும் என்பன ஒரு பொருட்கிளவிகளாக அமையுமாறு யாத்திருத்தலானும் நச்சினார்க்கினியருரை பொருத்தமுடையதன்றெனக. சொற்கள் பொருள்களைப் பற்றுக்கோடாகக் கொண்டு நிகழுமென்றாலே அவற்றை யுணர்த்து மென்பதும், "செலவினும் வரவினும் தரவினுங் கொடையினு நிலைபெறத் தோன்று மந்நாற் சொல் லும்" (தொல் – சொல – கிளவி) என்புழிச் செலவு முதலிய சொற்கள் அந்நாற் பொருளையு மிடமாகக் கொண்டு அந்நாற் பொருளையும் உணர்த்து மென்பது தோன்றுதல் போலத் தானே தோன்றுமாதலால் "இசைக்கும்" என்பதற்கு உணர்த்தும் எனவும் "ஆயிருதிணையின்" என்பதற்கு 'அவ்விருதிணையினை யும்' எனவும் வலிந்து பொருள்கொள்ளுதல் வேண்டியதில்லை யென்க.

சொல்லுக்குப் பொருளுணர்த்தும் வழியல்ல திசைத்தல் கூடாமையின் இசைத்த லென்பது உணர்த்துதலை யுணர்த்து கின்றதென்றால் சொல்லுக்குப் பொருளுணர்த்தும் வழியல்லது இயறலும் தோற்றலுங் கூடாமையின் 'இயலும் தோன்றும்' என்பனவற்றிற்கும் "உணர்த்தும்" எனப் பொருளுரைத்தல் வேண்டும் அவ்வாறு நச்சினார்க்கினியரும் எழுதாமையால் இசைத்தலென்பதற்கு உணர்த்தல் என எழுதுதல் சாலப்பொருந் தாததாகும்.


"ஆயுருதிணையினும் என்னும் உம்மை விகார வகையால் தொக்குநின்றது"

என்பது திணை யிரண்டெனப் பெறப்படலானும் அவை இணைத் தென அறிந்த வினைப்படு தொகுதியாகக் காணப்படுதலானும் ஆண்டு முற்றும்மையின்றி யமையாதது வருமென்பது, 'இனைத் தெனவறிந்த சினைமுதற்கிளவிக்கு வினைப்படு தொகுதியினும்மை வேண்டும்" (தொல் - சொல் - கிளவி) என்பதனால் விதிக்கப்படு தலானும் ஏன் உம்மையின்றி நிகழ்கின்றது என்னும் வினாவிற்கு விடையாகின்றது. விகாரம் – செய்யுள் விகாரம்.

[தொடரும்]

போதகர் தலைவர் அறிஞர்

# இராபர்த் கால்டுவெல் ஐயர்



தோற்றம்: 1814 மறைவு: 28—8—1891

பேரறிஞர் இராபர்த் கால்டுவெல் ஐயர் 1856-ஆம் ஆண்டில்
வெளியிட்ட திராவிட மொழிகளின் ஒப்பியலிலக்கண
நூலின் நினைவாக இந்நூற்றாண்டு மலர்
வெளிவருகின்றது.